KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஆடு ஜூன் மீ 6 உ [No. 23

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 353

2. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 355

3. பழுளாய் முருகர் பதிகம்
நவாலி க. சோமசுந்திரப் புலவர் 357

4. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 3.)
Shakespeare's "Othello" 359

5. சூரியன் (கிரகணங்கள்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 361

6. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B. L. 365

7. கலித்தொகை (மருதக்கலி 4.)
T. A. கனகசபாபதி முதலியார் 366

8. வர்த்தமானம் 368

க லா நி ல ய ம்

வித்தகமும் வித்தைகளும் 3.

இரசாயனம் வைத்தியம் முதலிய சாத்திரங்களின் வளர்ச்சியால் வாய்க்கக்கூடிய நற்பயன் ஒன்றும் கைவருதலின்றியே ஒன்றையொன்று தின்றுதீர்கின்ற உண்மையை உரைத்த ஜோட், அதன்மேல், எந்திரப் பெருக்கினால் மனிதர் உற்றிருக்கின்ற நிலைமையைப் பின்வருமாறு எடுத்துக் காட்டியிருக்கின்றார்:—

Machines. Of the hundred and one ways in which our failure in social wisdom causes us to misuse and misapply the goods which scientific knowledge has bestowed, none is more striking than the use to which we put our machines. I have already noted how the population insisted upon increasing up to the limit of its machine-made shirts and vests. The illustration, it is obvious, is allegorical. It is also symbolical of our extravagant wastage of the potential goods which machines might have bestowed. Machines, I take it, were invented to be man's servents. Their justification lies in their ability to increase productivity and to diminish human toil. In so far as they produce these results, machines are beneficial, in so far as they do not, they are neither beneficial nor harmful but unnecessary. That machinery has increased production is obvious, that it has lightened human toil is, however, very far from being the case. Men never worked so hard as in the nineteenth century when machines first became important; they never had so little leisure as they have to-day when machines are dominant. Men's new-born ability to exploit the forces of nature might have been expected to increase their leisure, and to confer a certain spaciousness and dignity upon their lives. Yet they live at greater pressure than before, and the whole urgency of the modern world is towards speeding up, greater efficiency and more intense competition, when it ought to be towards more ease, less hurry and greater co-operation. These evil results are due not to the fact that machines exist, but to the fact that they are revered.

Besides diminishing leisure the reverence for machines is destructive of joy and hostile to beauty. Though man's working day is shorter than it was at the beginning of the machine age, it is also far duller. Machinery robs works of the interest of a varied and creative process, and substitutes the unending repetition of a trivial and monotonous task. Since the advent of machinery few men see the beginning and end of the things they make, while their status is that of cogs in an organization which is itself mechanical.

I once had an affair with a young woman who had been engaged for eight hours a day for the

preceeding five years in a process which she believed to be incidental to the making of biscuit tins. A metal band containing holes or slots passed immediately before her ; into each hole or slot as it came opposite to her she was required to insert a small peg of metal, in appearance like an elongated bullet, which the band then carried on to the next worker to be subjected to some further process. If you did not insert your stick of metal quick enough, you were apt to lose a finger ; my young woman had already lost one and a half. It was only after I had known her for a couple of months, when I had occasion to interview the manager of the factory at which she worked, that I found she was, in fact, engaged in making not biscuit tins but umbrella ferrules.

From our irrational attitude to machines spring two separate dangers ; the first, that we shall turn ourselves into robots in time of peace ; the second, that we shall blow ourselves to pieces in time of war. In peace-time the machine threatens our souls, in war-time our bodies.

Robotization. The danger of Robotization is first hinted at in Samuel Butler's **Erewhon.** It is the function of great men to tell us not so much what they think, as what we think. They make us, in other words, articulate to ourselves. If we are not already unconsciously thinking on our own account what they have to tell us, their message evokes no response. The novel ideas of which the human mind is capable are, I imagine, strictly limited, and most of them have already been discovered several times without being noticed, until the time came when men's minds were prepared to receive them. They were then said to be discovered, when all that had happened was that their rediscovery for the first time attracted attention. This, I take it, is the explanation of my excitement on reading such a book as **Erewhon.** I shall never forget the thrill of delighted recognition, recognition of what I had unconsciously thought yet had not the wit to tell myself consciously that I thought, when I first read the chapter on the machines in that astonishing book. Since **Erewhon** appeared in the 'eighties a number of writers have essayed the same theme. The Morlocks in H. G. Wells's **Time Machine** and the Robots proper in Karel Kapek's R. U. R., are only concrete embodiments of a fear that we all feel, a fear that runs like a recurring **motif** through the symphonic disharmonies of modern literature, the fear of machines. You have only to see the first half-dozen shots of the film Metropolis for the fear to take visible shape. And the fear, if we put it into words, is that man will become the slave of the machines, and that his nature will be cast increasingly in the likeness of his masters. The care of machines is already man's chief occupation. Already we spend more time in tending and looking after machines than in tending and looking after one another. And the service of the machines is no light one. Having been brought up to expect attendance and consideration, they make things very unpleasant if they fail to get it. If they are not given fuel and water and oil, when they expect it, if they are not cleaned and warmed and washed and given their meals regularly, they grow sulky, or angry and boil over, or burst and blow up, destroying themselves and spreading havoc and destruction all round them. And knowing this and fearing it, men become increasingly subject to them. We made machines to be our servants ; but servants have a knack of achieving mastery over their masters by making their masters so dependent on them that they cannot do without them. And it is thus that the machines are learning to master us, for—the admission may as well be made—we cannot live without them. Deprive us of our machines and we should starve.

The machines determine the filling of our minds no less than that of our bellies. When some years ago the one London Labour daily paper, the **Daily Herald,** found itself in one of its recurring financial crises, it was saved by Odhams Press, which, although a capitalist concern, stepped in to the surprise of the newspaper world to put the **Herald** on its feet. That the Socialism of the **Herald** was no very serious menace to capitalist society is, no doubt, true ; it may even be said to remove the stings of the dispossessed masses by drawing off their revolutionary ardour into football competitions and free insurance policies, and so to do capitalism a service. But this possibility is obviously too subtle to have occurred to business men, who still regard the British Labour movement as a sinister force aiming at the overthrow of society, and some other explanation must be sought for the action of Odhams. This was provided by the Chairman at the annual meeting of Odhams Press, at which he was reported to have said that the decisive factor in determining Odhams to take over and capitalize the **Herald,** was the necessity for providing work during the other six days of the week for the greatly enlarged machine plant which they had had to install for the printing of the Sunday **People.** Thus it was the necessity of providing machines with work which determined the continuance of England's one Labour daily. The **Herald** is still very mildly labour, and presumably makes some converts to the cause which it professes to support, so that we may say that the political convictions of thousands

of human beings are largely determined by the necessity of giving machines occupation.

இவ் வாங்கிலபாகத்தின் பிண்டப் பொருள் பின் வருமாறு:—

வாழ்க்கைவித்தகம் பிழையாகிவிட்டதால், சாத்திர வித்தைகள் சாதித்துத் தந்திருப்பவைகளை நாம் துஷ்பிரயோஜனம்செய்துகொள்ளும் எண்ணிறந்த வகைகளினுள், எந்திரங்களை என்ன செய்கின்றோம் என்பதிற் சிறப்பாகக் காணலாம். மனிதனுக்கு ஏவலாளர்களாக இருக்கும்பொருட்டே எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன வென்பது வெளிப்படை. மனிதருடைய உழைப்பைக் குறைத்து அவர் செய்ய வேண்டிய பொருள்களின் அளவைப் பெருக்குவது எந்திரங்களின் கடன். இந்தப் பயன் விளையுமானால் அவை நல்லனவே, விளையவில்லையானால் அவை கெட்டவைகளுமல்ல, நல்லவைகளுமல்ல, மற்று, அனாவசியமானவைகளாகக் கருதப்படும். செயப்படுபொருள் பெருகுகின்றது என்பது நிச்சயம், ஆயினும் மனிதருடைய உழைப்புக் குறைந்ததென்பதோ சற்றேனும் இல்லையே. எந்திரம் அடர்ந்திருக்கின்ற இக்காலத்தில்தான் மனிதருக்கு ஓய்வென்பது சிறிதேனும் இல்லாமற்போய்விட்டது. இயற்கைச் சக்திகளைத் தன்வசமாக்கி நடத்தும் இத்திறமையானது ஓய்வு நேரத்தை அதிகப்படுத்தி மானுட வாழ்க்கைக்கோர் அகலமும் பெருமையும் அளிக்கும் என்று எதிர்பார்த்தனர். எனினும் மனிதர் நோமின்றி நசுக்குண்பது எக்காலத்தையும்விட இக்காலத்தில்தான் அதிகம். அமைதிக்குப் பதிலாக இவ்வெந்திரங்கள் ஆரவாரத்தையே அதிகமாக்கி விட்டன. அவைகளை ஆராதிக்கப் புகுந்ததனால் விளைந்த கேடாம் இது. அறிவின்றி நாம் எந்திரங்களை இவ்விதம் ஆராதிப்பதினின்று இரண்டுவித ஆபத்துக்கள் விளைகின்றன. யுத்தமில்லாத காலங்களில் நாம் எந்திரங்களின் ஏவலாளர்களாய் ஓடியலைகின்றோம்; யுத்த காலங்களில் நம்மைத் துண்டு துண்டாகச் சிதறடித்துக் கொள்கின்றோம். யுத்தமிருக்கும்போது நம் உடலிற்கு ஆபத்து, யுத்தம் இல்லாதபோது நம் ஆன்மாவிற்கு ஆபத்து.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து 8-ம் தசகம்.

[341-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பாசுரம்

சித்திரத் தேர்வலவா திருச்சக்கரத்தா யருளாய்
எத்தனையோருகமு மவையா யவற்றுள் ளியலும்
ஒத்தவண்பல் பொருள்களு லப்பிலவாய் வியவாய்
வித்தகத்தாய் நிற்றிநீ யிவையென்ன விடமங்களே

உரை:—பாரதயுத்தத்தில்விசித்திரமான தேரைப் பாகனாகவிருந்துநின் அளப்பரும்வல்லமையினால்அர்ச்சுனனைக் காப்பாற்றினவனே, திருசக்கரத்தாய்-அந்தப்போரில் ஜயத்ரதன் வதத்தின்பொருட்டுப் பகலைச் சக்ராயுதத்தால் மறைத்து இருள்மூடிய இரவாய் ஆக்கினவனே, எத்தனையோ யுகமும் - எவ்வளவோ யுகங்களாய், மாறி மாறி அவையாய் - பிருதிவியாதி பூதங்களாய்க்கொண்டு, அவற்றுள் இயலும் - அந்த அந்த யுகங்களுக்குப்பொருத்தமானகன ஒத்த-தக்கபடி,வண்-அழகான,பொருள்-பலபதார்த்தங்களாய், உலப்பிலவாய் - வரையறுப்பில்லாதவைகளாய், வியவாய் - ஆச்சரியங்களாய், வித்தகத்தாய் - தேவமனுஷியாதி விநோத விபூதிகளை யுடைத்தாய், நீ நிற்றி - நீ யிருந்தாய், இவையென்ன விடமங்களே "விஷமம்" என்னும் ஆரிய பதத்தின் திரிபு-ஒன்றோடு ஒன்று ஒப்பில்லாத பல பிரகாரமாய்ச் செய்த சிருஷ்டிகள். அருள் - கிருபைசெய்து சொல்ல வேண்டும் என்றார்.

4-ம் பாசுரம்

கள்ளவிழ்தாமரைக் கட்கண்ணனே
எனக்கொன் றருளாய்
உள்ளதுமில்லதுமாயுலப்பி
லனவாய் வியவாய்
வெள்ளத்தடங்கடலுள் விடநாகணை
மேல்மருவி
உள்ளப்பல்யோகுசெய்தியிவையென்ன
உபாயங்களே.

உரை:-கள்ளவிழ்தாமரை-அப்பொழுதலர்ந்துமகரந்த வாசனையும் தேன் வாடையும் வீசும் தாமரை புஷ்பங்களன்ன திருக்கண்களையுடைய கண்ணபிரானே,உள்ளதுமாய்-எக்காலத்திலும்ஒரேரூபமாயிருக்கிறபடியால்"உளதாகவே" விவஹரிக்கக்கூடிய சேதந வஸ்துகளும், இல்லதுமாய் - அடிக்கடி ரூபம் மாறுகின்ற அசேதநங்களாயும், உலப்பிலனவாய் - முடிவில்லாத மூலப் பிரகிருதியாய், வியவாய்-இதுபோல் முன்பு இல்லையென்று ஆச்சரியப்படதக்க வஸ்துவாய், வெள்ளத் தடங்கடலுள்-பாற்கடலில் விடங்களைமேல் மருவி - ஆதிசேஷனாகிய படுக்கையில் கிடந்து, உள்ளப் பல யோகுசெய்தி-உலகரக்ஷணத்தின் பொருட்டுப் பலரக்ஷணசிந்தனைகளைச் செய்யா நிற்றி-இவையென்ன உபாயங்களே ஒன்று அருளிச்செய்ய வேண்டும்.

குறிப்பு:—உலக இரக்ஷணத்தின்பொருட்டுப் பகவான்யோகம் செய்வதாகஇங்கு ஆழ்வார்கற்பித்திருப்பது புதுமை அன்று - கௌரவர்கள் பாண்டவர்களுக்குத் தாயபாகம் கொடுக்கமாட்டோ மென்று மறுத்தவுடன் யுத்தம்மூண்டு பாரதப்போர் இயற்றுவதாக இருதிறத்தாரும் நிச்சயித்தவுடன் அர்ச்சுனனும் துரியோதனனும் விவாபிரைக்கு ஸ்ரீகிருஷ்ணபகவானின் உதவியைக்கோரித் துவாரகைக்குச்சென்று ஒரேகாலத்தில் சந்தித்தபோது, பகவான்சையாஸந்திலமர்ந்து யோகுபுரிந்துகொண்டிருந்தார் கண்ணன் கண்விழித்தவுடன் திருவடிவாசத்தில்அமர்ந்திருந்த அர்ச்சுனனை நோக்கி எங்கு வந்தாயென்று வின

வியவுடன் தலைமாட்டிலோர் ஆஸநத்தில் அமர்ந்திருந்த துரியோதனன் யுத்தத்தில் தனக்குத் துணை நிற்கவேண்டுமென்று கோர, இருதிறத்தாரும் ஒரே காரியமாய்வந்ததாக ஊஹித்துப் பகவான் "நான் ஆயுதம் எடேன்" என்னுடைய ஸைந்நிய உதவியைஇருவரில் யார்வேண்டுமானாலும் பெறலாம், நான் மற்ற கட்சியில் ஒன்றியாக நிற்பேன்' என்றார். துரியோதனன் துவாரகைச் சேனையின் உதவியை யபேக்ஷிக்க அர்ச்சுனன் தன் கட்சியில் பகவான் ஒருவனே நின்று உதவுவதை உவந்தான்-துரியோதனன்விடைபெற்றுப்போனபின் அர்ச்சுனன் கண்ணபகவானை "நீவிர் என்னத்துக்காக யோகுபுரிந்தீர் - உமக்கு மிகவும் அவசியமுண்டோ" வென்று வினவ, பகவான் உலக ரக்ஷணத்தின்பொருட்டுத் தான்கூட யோகு புரிவது உண்டென்றும் தற்காலம் சிற்சில சிருஷ்டி நிமித்தமாய்ச் சிந்தனை செய்ததாகவும் பதில் அளித்தார்.

5-ம் பாசுரம்

பாசங்கள்நீக்கியென்னை யுனக்கே
அறக்கொண்டிட்டுநீ
வாசமலர்த்தண் துழாய்முடி
மாயவனேயருளாய்
காயமும் சீவனுமாய்க் கழிவாய்ப்
பிறப்பாய்ப் பின்னும் நீ
மாயங்கள் செய்து வைத்தி
இவையென்ன மயக்குக்களே.

அவதாரிகை:—இந்தத் தசகத்தில் ஆழ்வார்முக்கியமாகப் பகவானிடத்தில் செப்பக் கருதியவிண்ணப்பம் இந்தப் பாசுரத்தில் அடங்கியிருப்பதே. இந்தத் தம் குறையைத் தொடங்காமல் கீழ் நாலு பாசுரங்களில் அவனின் மற்றவித ஆச்சரிய சக்தியைப்பற்றி வெகுவாருகப்பிரஸ்தாபித்தது பிரஸங்கத்தில் நடுவே வந்து முளைத்தது.

உரை:—காயமுமாய்-ஜீவாத்மாக்களுடையதேஹ ஸம்பந்தத்தை உடையவனுகி, சீவனுமாய்-அதற்கு வேருனஜீவாத்மாவுமாய், கழிவாய்-மேல்படி தேஹ ஸம்பந்தநிவர்த்தி ரூபமானமரணமுமாய், பிறப்பாய் ஜந்மமுமாய் - நீ மாயங்கள் செய்துவைத்தி - நீஎன் விஷயத்தில் உன்சூதும்சூழ்ச்சியும் அறிவுக்குப் புலப்படாவண்ணம் மயக்கிவைத்திருக்கிறாய். அது எப்படியென்னில்-பாசங்கள் நீக்கி - உலகப் பற்றுக்களில் அகப்பட்டு அல்லல்படாமல் விலக்கி, என்னை, உனக்குக் அறக்கொண்டிட்டு - உன் குணாதிசயங்களிலும் அழகிலும் கலந்து உன்னில் முற்றிலுமே ஒடுங்கி உன்விஷயம் தவிர, மற்றவைகளை அநாதரவு செய்யஎன்மனத்தைத்திருத்திவைத்தாய், இப்படியாகப் பண்ணிவைத்தும் ஜந்மத்திற்கும் மரணஸம்பவத்திற்கும் என் தேஹமான மாயப் பிருகிருதிக்கும் நிர்வாஹகனுயிருந்தும்என் ஜீவாத்மாவுக்குத் தேஹசம்பந்தத்தைத் தவிர்த்துக் கொடுக்கவில்லையே-உன் சூழ்ச்சியை யறியக்கூடாமையால் ஸர்வமு மறிந்த நீ எனக்கு அதைத் தெரியச் சொல்லவேண்டும்.

6-ம் பாசுரம்.

மயக்காவாமனனேமதியாம்வண்ண
மொன்றருளாய்
அயர்ப்பாய்த் தோற்றமுமா யழலாய்க்
குளிராய் வியவாய்
வியப்பாய் வென்றிகளாய் வினையாய்ப் பயனாய்ப்
பின்னும் நீ
துயக்காய் நீ நின்றவாறு இவையென்ன
துயரங்களே.

உரை:—மயக்கா - வாமனவதார மெடுத்தபோது அந்த ரூபத்தின் வடிவழகினில் மஹாபலி ஈடுபட்டு மூன்று உலகங்களையும் தானம் கொடுத்ததாகத் திருவுள்ளப்பட்டு உரைக்கிறபடி. அயர்ப்பாய்-அஞ்ஞானமாய், தோற்றமுமாய் - தெளிந்த நல்ல ஞானமுமாய் - அழலாய் - வெப்பமான நெருப்பாய், குளிராய்ச் வியப்பாய்ச் ஒன்றோடொன்று சேரா சேர்த்தியான ஆச்சரியமாய்ச் வியவாய்- ஆச்சரியத்தால் வரும் மயக்கமே உருவெடுத்தது போலே விசேஷஆச்சரியவஸ்துவாய், வென்றிகளாய்- பலனையடைந்த உவப்புகளாய், வினையாய்ப் பயனாய்- செய் கர்மங்களின் புண்ணியபாவ பலன்களாய், பின்னும் நீ துயக்காய் - மேலு மிவையல்லாமல் வேறொரு விசேஷ ஞானத்தின்உருவாய் நீ, நீன்றவாறு- நீநிற்கும் பிரகாரங்களெல்லாம், என்ன துயரங்கள்- சீதம் உஷ்ணம் ஸுகம் பற்பல துக்கம் பற்பல அல்லல்களுடன் கலந்து நிற்பது உனக்கு ஸஹஜமாயினும் எங்களுக்குத் துக்கங்களை விளைவிக்கும் ஹேதுக்களாய் ஏற்படுகின்றனவே, மதியாய் அருளாய்-என்ன நிமித்தங்கள் கொண்டு மேல் கண்டதுகளெல்லாம்நடையாடுகின்றனவென்று அடியேனுக்குத் தெரியச் சொல்லவேணு மென்றார்.

7-ம் பாசுரம்.

துயரங்கள்செய்யுங் கண்ணு சுடர்நீள்
முடியாய் அருளாய்
துயரம்செய்மானங்களாய் மதனாகி
உவகைகளாய்த்
துயரம்செய் காமங்களாய்த் துலையாய்
நிலையாய் நடையாய்த்
துயரங்கள் செய்துவைத்தி இவையென்ன
சுண்டாயங்களே.

அவதாரிகை:—முன் பாசுரத்தில் சேதநர்களுக்குப் புண்ணிய பாபங்களான துயர்ப்பாடான பயன்களைப் பகவான் எக்காரணம் கொண்டு விளைவிக்கிறானென்று கேட்டவர், பகவான் தன் சிருஷ்டி கோடிகள் தீர்த்ததரை அனுபவிக்க ஏற்படுத்தியிருப்பது ஏதோ ஒரு விளையாட்டு ஸம்பற்றியிருக்குமென்று ஊஹித்துச் "சுண்டாயங்களா" அதாவது "சுயநலம் நாடுதல்" நிமித்தமா வென்று சங்கைப்படுகிறார்.

பொழிப்புரை:—உன்னுடைய திருவபிஷேகத்தின் அழகாலே நலிவு செய்யும் கண்ணனே - அதுபோலேயே விபூதியினுடைய ஆச்சரியத்தாலேயும் நலிவு படாமே தெரிவிக்கவேணும். துக்க ஹேதுவான

அபிமானமும் அதனால் வரும் மதம் உகப்பு காமங்களும் - அநுபவிக்கக் கஷ்டமான பளுவாக இருக்கின்றன. அவைகளின் நிற்பாடு, ஜீவாத்மாக்களை அவைகள் நடத்திச் செல்லும் பரியாயங்கள் இவ்வகைகளான துக்கங்களே நிறைந்து கிடக்கும் வியாபரங்களைச் செய்து வைக்கிறாய்-இவை என்ன விளையாட்டுக்கள்.

8-ம் பாசுரம்.

என்ன சுண்டாயங்களால் நின்றிட்டாய்
என்னையாளுங் கண்ணா
இன்னதோர் தன்மையென் றன்னை
யாவர்க்கும் தேற்றரியை
முன்னிய மூவுலக மவையா
யவற்றைப்படைத்துப்
பின்னுமுள்ளாய் புறத்தாய் இவையென்ன
வியற்கைகளே.

பொழிப்புரை:—என்ன விளையாட்டுக்கள் செய்பவனும் நிற்கின்றாய், என்னை யடிமை கொள்ளும் கிருஷ்ணனே - இன்ன சுபாவ முள்ளவனென்று அறியவொண்ணாத நீ, பழைய மூன்று உலகங்களையும் படைத்து அவற்றிற்குள் நடத்தும் கடவுளாயும் அவைகளுக்குப் புறமே வியாபித்தும் நன்றும் இது வென்ன ஆச்சரியம் - என்கிறார்.

9-ம் பாசுரம்.

என்ன வியற்கைகளால் எங்ஙனேநின்றிட்டாய்
என் கண்ணா
துன்னுகர சரணம் முதலாக
எல்லா வுறுப்பும்
உன்னு சுவையொளி ஊறொலி நாற்றம்
முற்றும் நீயே
உன்னையுணரவுறில் உலப்பில்லை
நுணுக்கங்களே.

பொழிப்புரை:—என்ன சுபாவத்தால் என்ன ஆகாரத்தால் நிற்கிறாய், எனக்குப் பிரியமான கண்ணனே-நெருக்கிய கைகால் முதலாய எல்லா அவயவ வுறுப்புக்களுக்குச் சுவை ஒளி ஸ்பர்சம் கந்தம் இவையெல்லாம் நீயே - உன்னையுணர யத்தனித்தால் முடிவில்லாத ஆச்சரியங்களேயாகும்.

10-ம் பாசுரம்

இல்லை நுணுக்கங்களே இதினில்
பிறிதென்னும் வண்ணம்
தொல்லை நன்னூலில் சொன்ன உருவும்
அருவும் நீயே
அல்லித் துழாயலங்கல் அணிமார்ப
என் அச்சுதனே
வல்லதோர் வண்ணம் சொன்னால் அதுவே
உனக்குஆம் வண்ணமே

அகஇதழ்களையுடைய திருத்துழாய் மாலை அலங்கரிக்கும் திருமார்பை யுடையாய்! உன்னைவிட ஆச்சரியமான நுணுக்கங்கள் உள்ளவஸ்துக்கள் உலகத்தில்பிற இல்லை-பழமையான வேதத்தில் சொல்லியபடி உருவாகத் தோற்றுமவனும் கண்களுக்குப்புலப்படாமல் சூக்ஷமமாய் அவயவங்களில்லாத வஸ்துவும் நீயே - எப்போதும் எல்லாப் பிரகாரங்களாலும் அழிவில்லாதவனே. வல்லதோர் வண்ணம் - உன் பக்தர்களானவர்கள் தங்களாலியன்றவரையில் உன் விபூதியை வர்ணிப்பார்களாகில் அதையே தகுந்த சிலாக்கியமாக ஏற்கும் துதியாக அமைத்துக்கொள்வாய் உன் புகழை எந்த வர்ணனையும் எட்டத்தகுதியாகாது-அதினின் யாதும் ஏகதேசமே. 3-ம் அடியில் ஸ்வயம்பிரகாசமான திவ்விய மங்கள விக்ரஹம் வர்ணிக்கப்படுகிறது.

11-ம் பாசுரம்.

ஆம்வண்ண மின்ன தொன்றென்று
அறிவரிய அரியை
ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சட
கோபன் அறிந்துரைத்த
ஆம்வண்ண வொண்தமிழ்கள்
இவையாயிரத்து ளிப்பத்தும்
ஆம்வண்ணத்தா லுரைப்பார் அமைந்தார்
தமக்கென்றைக்குமே.

குறிப்புகள்:—தமக்குஎன்றைக்கும் அமைந்தார்-தாங்கள் தங்கள் செய்யவேண்டியதாகஉள்ளகாரியத்திலேயே தங்கள் நன்மையையே நாடி அமர்ந்தார்கள்.

பொழிப்புரை-ஒருவராலும் ஒருவகையும் அறியவொண்ணாத ஸர்வேசுவரனை யுள்ளபடியே அறிந்து அறிந்தவற்றைப்பொருத்தமாகவும் உள்ளதற்கேற்றபடியாகவும் ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்திலித் திருவாய்மொழியைத் தங்கள் தங்களுக்கு இயன்ற அளவில் சொல்லுமவர்கள் என்றைக்கும் தனக்கேற்றமான சுவய நன்மையை நாடினவர்களாவார்கள்.

இத்தசகத்தில் ஆழ்வார் பகவான் நாநாவிதமான ஆச்சரிய விபூதியை உடையவனென்று கற்பிக்கிறார் - பரிபூர்ண ஆனந்தாநுபவத்திற்குத் தடையாகி நிற்கும் தன் தேஹஸம்பந்தத்தைப் பகவான் நிவர்த்தி செய்யாமல் தாம் சோவுபடச் செய்தேயும் அவன் தன்னுடைய விசித்ர விபூதியையும் சக்தியையும் காட்டித்தர அவற்றைக் கண்டு பிரீதியடைந்து இங்கு அவற்றை உரைக்கிறபடி.

பருளாய் முருகர் பதிகம்

காப்பு

அன்னவயல் சூழு மணிசேர் பருளையமர்
வன்னமயில் வாகன்சீர் வாழ்த்தவே-பின்னமிலாச்
சந்தத் தனித்தமிழைத் தந்தருளு மொற்றைமணித்
தந்தத் தனிப்போ தகம்.

நீரிற் றவழ்ந்து நெருப்பி னிடைக்குளித்துப்
பாரிற் கடல்கடந்த பைந்தொடியே—நேரில்
வரைமருளும் பன்னிருதோள் வள்ளல் கவிபாட
உரையருளி நாமே லுறை.

ஒன்று முடனு முயிரு முறுபொருளும்
அன் றெனவென் றேற்ற அற வோனே—என்றும்
இருள்வழியே போகா தெனைத்தடுத்து மற்றன்
அருள்வழியே போக்கி யருள்.

நூல்

சீரொழுகு மோராறு திருமுகமு மருளொழுகு
செந்தாமரைக் கண்களும்
சிறியநகை நிலவொழுக நறியசுவை
அமுதொழுகு செம்பவள மணிவாய்களும்
தாரொழுகு பன்னிரு தடந்தோளு மிமையவர்கள்
தலையொழுகு மிருதாள்களும்
தழலொழுகு வடிவேலு மழகொழுகு
மன்னைமார் சார்ந்தொழுகு மிருபாலுமாய்க்
காரொழுகு சித்திரக் கலவமயின் முதுகிலே
களியொழுக வெளிவருகுவாய்
காலொழுகு நீரிலே சேலொழுக வாவியிற்
கமலமலர் தேனொழுகவே
ஆறொழுகு சாலிவயல் அயலொழுகு சுழிபுரத்
தணிதிகழ் பறாளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக சரணமுன
தபயமென வருள் முருகனே.

மன்னுயிர்க் குயிராகி அறிவுதரு சோதியே
மாயையை யியக்கி யுடலும்
மருவுகர ணங்களும் வாழ்வுமிரு வினைநியதி
மாறும வருள்வள்ளலே
தன்னிகரில் தலைவனே யருவாகி யெங்குந்
தழைத்துயிர் பிழைக்கவருள்கூர்
தத்துவ மிறந்தமெய்ப் பொருளே மலப்பிணி
தவிர்த்திடு மருத்துமலையே
என்னையினி யொருதாய் வயிற்றிலே போய்ப்பிறந்
திறவாம லுறவாமுன
திணையடி நிழற்கணே பேரின்ப நுகர்வதற்
கேற்றவழி சாற்றியருள்வாய்
அன்னமுலவுங்கமல வாவியுஞ் சோலையு
மணிந்திடுப றாளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக சரணமுன
தபயமென வருள்முருகனே.

பச்சைப் பசுங்கொடி இடங்கொண்ட முக்கட்
பருப்பதத் தினில்முளைத்த
பைங்கணீ ராறுடைச் செங்கரும் பேயிருட்
பழமல மறக்குநறவே
கச்சுக் கடங்காத கனதனக் குறவள்ளி
காந்தனே வேந்தனருளுங்
கதிர்மதிச் சுடர்நுதற் பிடிதழுவு
மீராறு கையுடைய கருணைமலையே
செச்சைத் திருத்தொங்கல் துயல்வருந் தோளனே
செஞ்சதங் கைத்தாளனே
தீராத நோய்களைத் தீர்க்கின்ற வமுதசஞ்
சீவியே யுனைநம்பினேன்
அச்சப் பிறப்பிறப் பழியமொழி தரவேணு
மணிதிகழ்ப றாளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக சரணமுன
தபயமென வருள்முருகனே.

பல்லிய மியம்பமுத் துக்குடை நிழற்றவிரு
பக்கமுங் கவரிவீசப்
படுமணி யிரட்டவர கரமுருக சரவண
பவாயநம என்றுபரவித்
தொல்லையடி யவர்தொழ நறும்புகை கமழ்ந்தெழச்
சுடரொளி விளக்கவிர்தரச்
சுருதிக ளொளித்திடத் தமிழ்மறை கலித்திடச்
சோதிமணி மண்டபத்தில்
மல்லன் முடிவில்லிடக் குண்டலம்
வெயிலுமிழ மணிமுறுவல் நிலவுசொரிய
மங்கலத் தவிசிலே கொலுமேவு
மமையத்து வந்துகண் டாசைகொண்டேன்
அல்லியலு மலமொழித் தடியிணைகள்
தரவேணு மணிதிகழ்ப றாளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

மண்ணிலே பெண்ணிலே பொன்னிலே
வருமாசை மண்ணளவு மாறவில்லை
வாக்கிலே மெய்யில்லை மெய்யிலே
தொண்டில்லை மனதிலே யன்புமில்லை
எண்ணிலே யறனில்லை வெவ்வினைகள்
புரிவதற் கெள்ளளவு நாணமில்லை
இறப்புப் பிறப்பினுக் கச்சமிலை
நல்லவ ரிணக்கமொரு ஞான்றுமில்லை
கண்ணிலே கண்டிடப் பேறில்லை
யென்றெனைக் கையுதறி விடினையகோ
கதியில்லை மன்னுயிர்க் கருள்கின்ற
வுன்பெருங் கருணைக்கு மேன்மையில்லை
அண்ணலே அருளுருக் காட்டியெனை
யாளுவாய் அணிதிகழ்ப றாளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

மாவேவு செம்பொன்மணி முடியாட
வொளிமேவு மதிநுதற் சுட்டியாட
மணிமேவு மகரகுண் டலமாட
வணிமேவு மார்பினில் மதாணியாடப்
பூமேவு மீராறு தோளாட
வழகுமுப் புரியாட வடமுமாடப்
பூட்டுபொற் கச்சாட வடிகளிற்
றண்டையும் பொன்னஞ்சி லம்புமாடத்
தேமேவு மயிலாட மயிலாட
வன்னைமார் திருவுளமகிழ்ந் தாடிடச்
சேவலங் கொடியாட நடமாடி
வீதிவரு செவ்விகண் டாசைகொண்டேன்
ஆமேவு மைந்தாடு மையனருள்
மெய்யனே அருள்கூர்ப றாளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

பொல்லா வுயிர்க்கொலை புரிந்தேனோ
வயலவர்கள் பொருளைநனி வௌவினேனோ
புன்புலா லுண்டேனோ பிறர்மனை
நயந்தேனோ பொய்யுரைவ ழங்கினேனோ
நல்லார் மனம்நைய வைதேனோ
பிறர்செய்த நன்றியைம றந்திட்டேனோ
நம்பிக் கெடுத்தேனோ குருவைநிந்
தித்தேனோ நான்செய்த பாவமறியேன்

செல்லாத வறுமையுந் தீராத
நோய்களுஞ் சேராத துயருமீண்டித்
தீயிலே யிட்டசெந் தளிர்போல
வாடுமிச் செய்திநீ யறியாய்கொலோ
அல்லாத பிழைபொறுத் தாளாக
வாளுவாய் அணிதிகழ் பருளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

தாயார் வயிற்றிலே திங்களொரு
பத்துத் தனிச்சிறை யிருந்துழன்றும்
தாரணியில் வந்தைந்து வயதளவு
மறியாமை தன்னிலே மிக்குழன்றும்
தேயாத கல்வியைத் தேடாது
காமவெந் தீயிலே புக்குழன்றும்
சேர்ந்தமனை மக்களுக் கூணுடைகள்
தேடுமச் செலவிலே நனியுழன்றும்
ஓயாத மிடியிலும் பிணியினு
முழன்றுமென் னுடல்வலி சுருங்கிமூத்தே
ஓடிவரு காலனுக் காளாகி
நரகத்து முழலமுடி யாதையனே
ஆயாகு முன்னடிக் காளாகி
வாழவருள் அணிதிகழ்ப ருளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

கங்கையணி செஞ்சடைக் கடவுணுதல்
விழியிலே கருவாகி யுயர்சரவணக்
காமர்பைஞ் சுனையிலே உருவாகி
அறுவர்விழி களிகொளுங் குழவியாகி
மங்கையுமை தழுவவொரு வடிவாகி
இறைவற்கு மறைமுதற் குருவுமாகி
மணிகடரு மைங்கையர்கள் மைந்தர்க்கு
முதலாகி வானவர்கள் தலைவனுகிச்
செங்கைவடி வேல்கொண்டு சூர்முதல்
தடிந்தமரர் சிறைவிடுத் திடும்வீரனுய்த்
தெய்வப் பிடிக்குமலை மானுக்கு
முன்னஞ் சிறந்தமண வாளனுகி
அங்கைமலர் கொண்டுதொழு வோர்க்கருளும்
வள்ளலே அணிதிகழ் பருளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

கலைகொண்ட முத்தமிழ்க் கடலே
செழும்புலவர் கவிகொண்ட கனகமலையே
கலிகொண்ட விருளுக்கு வெயிலேதண்
ணருள்நிலவு கால்கின்ற கலைமதியமே
விலைகொண்ட முத்தமே ஒளிகொண்ட
வைரமே விண்கொண்டி டாவமுதமே
வேல்கொண்ட கையனே மால்கொண்ட
பொய்யனேன் வினைகொன்று கதியீகுவாய்
இலைகொண்ட வரசிலே நிலைகொண்ட
வேம்புநின் றினமயில்கள் நடனமாட
எழில்கொண்ட பூம்பொய்கை குதிகொண்டு
புனன்மூழ்கி இளைஞர்விளை யாடவயலே
அலைகொண்ட வயலிலே கயல்விண்டு
புயல்தாவும் அணிதிகழ்ப ருளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக
சரணமுன தபயமென வருள்முருகனே.

வற்றுது பெருகுநின் திருவருட்
கடலிலே மலமாசு கழுவியாட்டி
வாசனை புனல்துடைத் துத்தூய்மை வெண்டுகில்
வனைந்தன்பு பொறுமை முதலாம்
கற்றுவு நற்குணக் கலனணிந் தருள்நிலைக்
கலவைவெண் ணீறுசாத்திக்
கருவிற் பிறந்திறந் திடுபெரும் பசிகெடக்
கலைஞான வமுதமருளிப்
பொற்றும ரைக்கமழ் புதியதிரு மனையிலே
புகவிடுத் தத்துவிதமெய்ப்
போகத்தி லேநனி திளைத்தின்ப மடையவருள்
புரிகுவாய் இருவகைப்பற்
றற்றுர் தமக்குரிய பற்றுகு மண்ணலே
அணிதிகழ்ப ருளையமரும்
அரிமருக குமரகுரு பரதருக சரணமுன
தபயமென வருள்முருகனே.

திருச்சிற்றம்பலம்.

ஒத்தெல்லோ

["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 3.

[350-வது பக்கத் தொடர்ச்சி]

இயாகோ:—என்ன புண்பட்டனையோ, அடுத்த அதிகாரியே?

காஸ்:-ஆம்; இரணவைத்தியமெல்லாங் கடந்து.[1]

இயா:-அட தெய்வமே, அப்படி யாகவேண்டா.[2]

காஸ்:—கண்ணியம், கண்ணியம், கண்ணியம்! ஐயோ கண்ணியத்தை இழந்துவிட்டேனே. என்னின் நிரந்தரமான பாகத்தை இழந்துவிட்டேன், எஞ்சியதெல்லாம் விலங்கியல் வாய்ந்ததே—என் கண்ணியம், இயாகோ, என் கண்ணியம்![3]

(1)எல்லாங் கடந்து புண்பட்டிருக்கிறேன்-என்று முடியும். எந்த இரணவைத்தியனுலும் ஆற்றுமாட்டாப் புண்ணும் நான் அடைந்திருக்கும் புண் - என்பது பொருள்.

(2) காஸ்ஸியோ பட்டிருக்கும் புண்ணிற்குத் தான் இரங்குவான்போல் இங்ஙனம் கூறுகின்றுன்.

(3) கண்ணியம் - மதிப்பிற்குரிய நற்பெயர். இரணவைத்தியனுலும் ஆற்றுமாட்டாப் புண் என்பது தான் இழந்த கண்ணியமே என்றுகூறிக் காஸ்ஸியோ இரங்குகின்றுன். ஒருவன் உடலோ அழிந்துவிடுவது, அவன் எடுத்த நற்பெயரோ என்றும்அழியாமல்நிரந்தரமாகநிற்கும்;எனின், கண்ணியம் போனபின் எஞ்சி யிருப்பது மிருகத்தன்மையே யொழிய வேறில்லை; நான் இனிவிலங்கிற்கு நிகரேயன்றி மனிதன் என்பதற்கு உரியவனல்லன் - என்பது பொருள்.

(4) நீ வருந்தியதைப் பார்த்தால், இச் சண்டையில், உண்மையாக நீ ஏதோ உன்உடல் சிதையும்படி மிகப்பெரிய இரணம் அடைந்தாய் என்றல்லவோ எண்ணினேன்-என்பது பொருள்.

இயா:—நிச்சயமாக, நீ யேதோ உடற்புண்ணுற்றாய் என்று எண்ணினேன்[4]. கண்ணியத்திலும், அதனிலோ பொருள் அதிகம் உளது[5]. நற்பெயர் என்பதெல்லாம் வீண். பொய்யாய மிகப்பெரிய மோசம்; பெரும்பாலும் யோக்கியதையின்றிப்பெற்றுத் தகுதியின்றியே இழந்துவிடுவதொன்று[6]. அன்னவாறு இழந்தவனாக உனக்கு நீயே பெயர்வைத்துக்கொண்டாலன்றி நீ ஒரு நற்பெயரையும் இழக்கவில்லை[7]. என்ன ஐயா! தலைவனை மீண்டும் பெற்றடைய வழிகள் இருக்கின்றன[8]. இப்பொழுது நீ அவனது கோபத்திற்றான் தள்ளப்பெற்றிருக்கின்றாய்[9]. அகந்தையுள்ள அரிமாவை அச்சுறுத்துதற்குக் குற்றமற்ற நாயை ஒருவ ரடிப்பதேபோல், விரோத புத்தியிலும் விவகார யுக்தியிற்றானே அமைந்ததாம் இத்தண்டனை[10]. மறுபடி அவனை வேண்டிக்கொள், பின் அவன் உன்னுடையவனாகிவிடுகின்றான்.[11]

காஸ்:—அத்துணை நல்லவோர் தலைவனை, இத்துணை யெளிய இத்துணை களித்த இத்துணை புத்திகெட்டவோர் உத்தியோகஸ்தனால் வஞ்சிப்பதைக்காட்டிலும், இகழும்படியே வேண்டிக்கொள்வேன்.[12] கள் வெறிகொள்வதா? கிள்ளையிற் குழறுவதா? குழப்பம் விளைப்பதா? வீம்பு பேசுவதா? தன்னுடைய நிழலோடுதானே நீள்மொழி நிகழ்த்துவதா?[13] கண்ணிற்குப்புலப்படா ஓ, ஒயினின் ஆவியே, உன்னை அறிவதற்கொருபெயர் உனக்கில்லையாயின், பேயென்றே யுன்னை யழைத்திடுவோம்.[14]

இயா:—நீ உன் வாளுடன்தொடர்ந்த அவன் யாவன்? உனக்கு என்ன செய்தான் அவன்?[15]

காஸ்:—நானறியேன்.

இயா:—அப்படியும் இருக்கமுடியுமா?[16]

காஸ்:—ஒருபொதி விஷயங்கள் என் நினைவில் இருக்கின்றன, ஆயினும் எக்காரணத்தால் என்பதொன்றுமில்லை[17]. ஓ தெய்வமே, தம் மூளைகளைத் திருடிக்கொண்டு போகும்படி தாமே ஒரு பகைவனைத் தம் வாயினுள் பெய்துகொள்வதா?[18] உவகையோடும் இன்பமோடும், களிப்போடும் நம்மை நாமே மிருகங்களாக மாற்றிக்கொள்வதா?[19]

இயா:-ஏன், எனினும் இப்பொழுது நீ நன்றாகவே இருக்கின்றாயே; இப்படி நீ உன்னை மீட்கவந்ததெங்ஙனம்.[20]

காஸ்:—குடிவெறிப்பேய், கோபப்பேய்க்கு இடங்கொடுக்க மனங்கொள்ளலாயிற்று. என்னையே யான் ஒளிக்காமல் வெறுக்கும்படி ஒருகுறை எனக்கு மற்றோர்குறையைக் காட்டித்தருகின்றது.[21]

இயாகோ:—வா, வா; அளவுகடந்ததோர் கடுமை வாய்ந்ததருமநூலாசிரியனாயிருக்கின்றாய் நீ.[22] காலமும் இடமும் இத்தேயத்தின் நிலைமையும் இருக்கும் வகையில் இது நேராமலிருக்கலாகாதாவென்று இதயமுற வேண்டுகின்றவனாகின்றேன்; எனினும், இது இருக்குமாறு இருப்பதால், அதனை உன் நன்மைக்கே திருத்திக்கொள்.[23]

காஸ்:—என்னுடைய இடத்தைமீண்டும் தரும்படி நான் அவனைக் கேட்பேன்—நானோர் குடிகாரனென்று எனக்குச் சொல்வானவன்.[24] ஹைட்ரா

(5) கண்ணியத்தை இழந்தேன் என்பதிலும், புண்பட்டேன் என்றால் இதனில்தான் பொருள் ஏதேனும் இருக்கின்றதென்று எண்ணலாம்—என்பது பொருள்.

(6) நற்பெயரென்பதெல்லாம் வீணான ஒருபொருளற்ற சொல்லாம். ஒரு யோக்கியதையும் இல்லாதவர் நற்பெயரெடுத்துவிடுகின்றார்; ஒரு நியாயமும் இல்லாமல் அதனை இழந்துவிடுகின்றார்; ஆகையால், நற்பெயரென்பதைப் போல் மோசமானது வேறொன்றுமில்லை.

(7) நற்பெயர் என்பதொன்றே இல்லை, ஆகையால், இல்லாததொன்றை நீ இழந்தனை என்பது பொருளற்ற வாசகம். அப்படி நீ 'இழந்தேன் இழந்தேன்' என்று சொல்லிக்கொள்வதால் நீ உன்னையே இழிந்தவனாக்கிக் கொள்வதன்றி உண்மையில் உனக்கிப்பொழுது எவ்விதக் குறைவும் நேரவில்லை—என்பது பொருள்.

(8) ஒத்தெல்லோவின் அன்பை மீண்டும் அடைவதற்கு வழிகள் உண்டு - என்பது பொருள்.

(9) உன்னைத் தள்ளியதற்குக் காரணம் அவனது கோபமே யன்றிப் பகையன்று - என்பது பொருள்.

(10) உன்னை உன் உத்தியோகத்திலிருந்து ஒத்தெல்லோ தள்ளினான் என்றால் அது உன்மேலுள்ள விரோதத்தினால் அன்று; சிங்கத்தைப் பழக்குமொருவன் அதனை அடிக்கத் துணியாமல், அது கண்காண, அதற்கு அச்சமுண்டாகும்படி வேறு ஒரு நாயை அடிப்பான். இது நாயின்மேலிருந்த விரோதத்தினாலன்று; இத்தகைய அடி தனக்கும் விழுமே என்று அஞ்சி அச்சிங்கம் அடங்கும் பொருட்டே அவன் அந்நாயை அடிப்பவன் ஆகின்றான். அப்படியே, உன்னை இப்பொழுது இவன் தண்டித்தது, மற்றவர்களைப்பயத்தினுள்வைத்திருப்பதற்கே என்பதை அறிந்துகொள்—என்பது பொருள்.

(11) உன்னை மன்னித்து மீண்டும் வேலையிலமர்த்தும்படி வேண்டிக்கொள்வாயானால் பண்டேபோல் உன்னிடம் அன்புடையவனாகிவிடுவான்—என்பது பொருள்.

(12) நான் ஒத்தெல்லோவை ஒன்று வேண்டிக்கொள்வதானால் என்னை மேன்மேலும் இகழும்படி வேண்டிக்கொள்வேனேயல்லாமல் மீண்டும் என்னை உத்தியோகத்தில் அமர்த்தும்படி வேண்டமாட்டேன். அவ்வளவு நல்ல தலைவனுக்கு என்னைப்போன்ற இவ்வளவு கெட்ட அடுத்த அதிகாரி உதவமாட்டான்—என்பது பொருள்.

(13) செய்யத்தகாதன தான் செய்தவைகளை யெல்லாம் சொல்லிச் சொல்லி வருந்துகின்றான் காஸ்ஸியோ. கிள்ளையிற் குழறுதல்-கிளிப்பிள்ளைபோல் பொருளின்றிப் பிதற்றுதல். குடிமயக்கம் கொண்டவர் தம் நிழலோடு சம்பாஷிப்பதைப் பின் குறிக்கின்றான்.

(14) ஒயினின் ஆவி=சாராயத்தின் அதிதேவதை. அதற்கு ஒருவரும் பெயர்வைக்கவில்லை; ஆயினும் அது தான்பேய்—என்பது பொருள்.

(15) ராடரிகோவின் அடையாளம் காஸ்ஸியோவிற்குத் தெரிந்ததோ இல்லையோ வென்பதை இயாகோ இங்ஙனம் கண்டுகொள்ள முயல்கின்றான்.

(16) உனக் கொருவன் என்னசெய்தான் என்பதும் தெரியாமல் அவனுடன் நீ சண்டைசெய்ய எப்படி நேர்ந்தது, என்று இயாகோ ஆச்சரியப்படுகிறான்.

(17) நிகழ்ச்சிகள் பல, குவியல்குவியலாக என் நினைவில் கிடக்கின்றனவே யொழிய ஒன்றுந் தெளிவாக இல்லை. கலகம் விளைந்ததென்பது தெரிகின்றது, ஆயினும் அதன் காரணம் விளங்கவில்லை—என்பது பொருள்.

19 மதியைக் குழப்பிவிடுகின்ற கள்ளைத் தாமே குடிக்கின்ற மனிதர் எத்துணை முழு மூடர்களாய் இருக்கவேண்டும் என்று வியக்கின்றான். "உண்டாரை வெல்நறா ஊண் ஒளியாப் பாக்கம்', எனவரும் சிலப்பதிகாரத்தின் (கானல் வரி) சொற்கள் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

(19) கொள்வதா... இது வென்ன விபரிதம் !—என்று முடியும்.

(20) இழந்திருந்த உன் ஸ்மரணையை மீண்டும் நீ எப்படிப் பெற்றாய் - என்பது பொருள்.

(21) என்மேல் எனக்கே மூண்டெழும் கோபமானது நான் கொண்டிருந்த கள் வெறியை மாற்றிவிட்டது - என்பது பொருள். கள், கோபம், இரண்டையும் பேய்களாக உருவகம் செய்கின்றான். கள் என்னும் பேய், கோபம் என்னும் பேய்க்கு இடங்கொடுத்துத் தான் போய்விட்டது. கள், கோபம் இரண்டும் குறைகளே. கள் குடித்தலாகிய குறை இப்பொழுது கோபங்கொள்வதாகிய குறையை விளைவித்தது; அதனால் நான் என்னை வெளிப்

வைப் போல் எனக்கு அத்தனை வாய்கள் இருந்தாலும் அவைகள் அத்தனையும் அவ்விடை அடைத்துவிடும்[25]. இப்பொழுது ஒரு அறிவுள்ள மனிதனாயிருந்து வரவர ஒரு மடையனாகி, உடனே ஒரு மிருகமா! ஹா அதிசயம்'[26]—மிதங்கடந்த வள்ளம் ஒவ்வொன்றும் சபிக்கப்பெற்றது; கலந்து வைத்திருப்பதும் ஒருபேயே. [27]

இயா:—வா, வா; நேராக உபயோகித்தால் நல்ல ஒயினானது நல்லதோர் தோழமை வாய்ந்ததொன்றே[28]. அதற்கு விரோதமாக இனி ஒன்றும் ஒலமிடாதே. மற்று நல்ல அடுத்தஅதிகாரியே, நான் உன்னை நேசிக்கின்றேனென்று நீ நினைக்கின்றாயென்று நான் நினைக்கின்றேன்.

காஸ்:—நேராக நான் அதனை ஒப்புக்கொண்டிருக்கின்றேன், ஐயா—நானா குடிவெறிகொண்டேன்!

இயா:—நீயும், அன்றி, மனிதன் உயிருடனிருப்பவன் எவனுமே, ஒவ்வொருவேளை குடிவெறிகொள்ளலாம், ஐயா. நீ என்ன செய்யவேண்டுமென்பதைச் சொல்லுகின்றேன். நம் அதிபதியின் மனைவி இப்பொழுது அதிபதியாயிருக்கின்றாள் [29]. நான் இவ்வகையில் இப்படிச் சொல்லலாம்; ஏனெனில், அவளது அங்கங்களையும் அழகையும் சிந்தித்துக் கவனித்துக் குறிகொள்வதற்கே ஈடுபட்டுத் தன்னைத் துறந்துகொண்டிருக்கின்றான். அவன் [30] அவள்பாற்சென்று உன்னைத்தடையின்றி ஒப்புக்கொள் [31]; அவளை மன்றாடிக் கேள். உனதிடத்தில் மீண்டுமுன்னையமர்த்த உதவிசெய்வாள். தன்னை வேண்டியதற்கு மேலும் தான் செய்யாமை நன்மைக்கோர் குற்றமாம். என்னக் கொள்ளும்வகை அவள் அத்துணை உதாரமும் அத்துணை அருளும் அமைதியும் அத்துணைப் பாக்கியமுடைய பதவியும் பெற்றவள் [32]. உனக்கும் அவள் கணவனுக்கும் இடையே உடைந்துவிட்ட இக்கணுவினைச் சீராய்வைத்துக் காட்டும்படி அவளை வேண்டிக்கொள்.[33] சொல்லற்குரிய எப்பணையத்திற்கும் எதிராக என் செல்வத்தையெல்லாம் வைக்கின்றேன்; உங்கள் அன்பின் இப்பிளவு முன்னினும் வலிதாக வளரும்.[34]

படையாக வெறுத்துக் கொள்கின்றவனாக இருக்கின்றேன்.

(22) குடித்தது பற்றி நீ உன்னை இவ்வளவு கடுமையாய் வெறுத்துக்கொள்வது தருமமன்று-என்பதுகருத்து. 'வா, வா' என்பது 'போதும், போதும்' என்னும் பொருளுடையது.

(23) போர்ப்பயத்தால் குழம்பியிருக்கின்ற இந்தத் தீவில் இக்கலகம் இப்பொழுது நேர்ந்தது மிகவும் வருந்தத்தக்க பிழைதான். எனினும், ஆனது ஆகிவிட்டது. இனி, இழந்த உன் உத்தியோகத்தை மீண்டும் அடையும் வழியைத் தேடிக்கொள் - என்பது பொருள்.

(24) என்னுடைய உத்தியோகத்தை மீண்டும் தரும்படி கேட்டால், "ஏ, குடிகாரா, உனக்கு அப்பதவி தகாது" என்றுவிடுவான் ஒத்தெல்லோ - என்பது பொருள்.

(25) ஹைட்ரா, என்பது கிரேக்கர் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்ற ஒரு பாம்பு; நம் ஆதிசேஷனைப் போல் இதற்கு அனேக தலைகள் உண்டு. குடிகாரனாகிய எனக்கு மீண்டும் என் இடத்தைக் கொடுக்கும்படிகேட்க வாயில்லாமற் போய்விட்டதே - என்பது பொருள்.

(26) அறிவுடைய வொருவன் கள்ளைக்குடித்து மடையனாகிப் பிறகு மிருகமாகவும் முடிந்துவிட இசைகின்றானே; இது வென்ன அதிசயம் - என்பது பொருள்.

(27) வள்ளம் - கிண்ணம். கலந்து வைத்திருப்பது - சாராயம். ஒவ்வொரு மதுவின் வள்ளமும் ஒரு பேயைத் தன்னுள் கொண்டிருக்கவேண்டுமென்னும் சாபத்தைத் தாங்கி நிற்கின்றது - என்பது பொருள்.

(28) மிதமாகக் குடித்தால் கள்ளும் நல்லதே யன்றி விரோதஞ் செய்யாது—என்பது பொருள்.

(29) அதிபதி - சேனைத் தலைவனாகிய ஒத்தெல்லோ. அவன் எல்லாரையும் நடத்துகின்றானென்றால், அவனையுஞ் சேர்த்து இப்பொழுது டெஸ்டிமோனா நடத்துகின்றாள் - என்பது பொருள்.

(30) டெஸ்டிமோனாவினாலேயே தன் மனம்முழுவதையும் நிறைத்துக்கொண்டிருக்கின்றான் - என்பது பொருள்.

(31) உன் செய்தியையெல்லாம் அவளுக்குச் சொல்- என்பது பொருள்.

(32) தன்னை யொருவர் வேண்டிக்கொள்ளும் அளவே உதவி செய்வதுடன் நின்றுவிடுவது ஒரு குற்றமே எனக் கருதி அதற்குமேலும் செய்கின்ற உயர்ந்த குணத்தவள் - என்பது பொருள்.

மிக்க பாக்கியவதி இவள் என்று முன் (அங்கம் 2. களம் 1,) ராடரிகோ சொன்னபோது அதனை மறுத்த இயாகோ இப்பொழுது அதனையே காஸ்ஸியோவிற்குச் சொல்கின்றான்.

(33) உடைந்த எலும்பைச் சீராய்வைத்துக் கட்டி ஒட்டுவது போல், உங்களிருவருக்கும் இடையே சிதைந்த இந்நட்பை மீண்டும் சேர்த்துவைக்கும்படி அவளை வேண்டிக்கொள்—என்பது பொருள்.

(34) பிளவு வளரும் - என்பது, பிளவு சேர்ந்து பிறகு அவ்வன்பு முன்னிலும் வலியதாகும். இதற்கு நான் என் செல்வமத்தனையும் பணையமாக வைக்கின்றேன் - எனப் பொருள்படும்.

சூரியன்

[346-வது பக்கத் தொடர்ச்சி]

VII. கிரகணங்கள்

இருந்தவா ளவுண ரெல்லாம் எக்கற வெய்த சாவா
மருந்தினையமரர் தாமே மகிழ்ந் துணப்பொழிந் துபோக்கிக்
கரந்தமு துண்டாற் செங்கேழ் கதிரொடு திங்கள் நோக்க
அரிந்திட ஐய னந்நாள் அவுணனுங் கிறந்தி லானல்,
அங்கரிந் திடவி ராகு வாகிய அவுணன் சென்னி
துங்கவெவ்விராகுவென்றும் சொல்லுடல் கேதுவென்றும்
தங்கிரு பெயர்சேர் கோளாய்ச் சார்ந்திடு கோள்க ளோடு
திங்களைக் கதிர்வெய்யோனைத் தீண்டுமீர்உவாவிற்சேரின்.

—செவ்வைச் சூடுவார் பாகவதம்

புராணம்:—இயற்கைக் காட்சியாகிய கிரகணங்களைப் பற்றி, ஒரு பழைய புராணக் கதையுண்டு. தேவர்கள் ஒரு புறமும், அசுரர்கள் மற்றொரு புறமுமாக நின்று பாற்கடலைக் கடைந்தனர், அப்போது, அமிர்தம் பிறந்தது. இரு திறத்தவரும் ஒருவரோடொருவர், 'எனக்கு, எனக்கு' என்று கோரமான சண்டையிட்டனர். அதனைக் கண்ட மாயோன் மாயையால் மோகினி வடிவெடுத்து, அசுரரை வஞ்சித்து, அமரருக்கு அமிர்தத்தைப் பகிர்ந்தளித்தான். இந்தவஞ்சனையையறிந்த அசுரன் ஒருவன், அமரரில் ஒருவனாக

மாறுவேடம்பூண்டு, தேவர் கூட்டத்திற் கலந்துகொண்டு, அமுதத்தை வாங்கியுண்டான். இதனைச் சூரிய சந்திரர்கள், விஷ்ணுவுக்குத் தம்கண்ணினால்குறித்துக் காட்டினர். அச்சுதன் அக்கணமே, அளவிலா வெகுளி கொண்டு, தன் கைச் சட்டுவத்தால் அடித்தானும். தலை வேறு உடல் வேறாக விழுந்தான் அவ்வசுரன். அமுதமுண்ட விசேடத்தால் இறந்திலன். இராகுவே தலை; கேதுவே உடல். இவர்கள் சிவார்ச்சனை செய்து கிரகங்களாகித் தம்மைக்காட்டிக்கொடுத்தசெங்கதிர் வெண்கதிர்களைத் தீராத்துயர் செய்துவருகின்றனர். இராகு, கருநாகம்; கேது, செந்நாகம்; இவைஇவ்வாறு விழுங்குங் காலமே, கிரகண காலம்; கிரகணம் உண்டாதற்குக் காரணம் ஈதே என்ன, நமது புராணங்கள் கூறுகின்றன. இராகுவின் தலை என்பது, இலக்கணம் ஓதுவார்க்கும், தத்துவ சாஸ்திரம் ஆராய்வார்க்கும், தலைநோய் விளைப்பதொன்றாகும். ஆறாம் வேற்றுமையில், உருபேற்கும் சொல்லும், கொண்டு முடியும் சொல்லும், ஒற்றுமைப் பொருளில் வருவதற்கு, இராகுவினுடைய தலை என்பதுதான் எடுத்துக்காட்டு. தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியில், ஆத்திகர்கள் "என்னுடைய குதிரை" என்றபோது, குதிரையினும் நான் வேறாய் இருத்தல்போல, 'என்னுடைய உடல்' என்றபோது, உடலினும் யான் வேறாதல் வேண்டும்" என்பர்: இதனை மறுத்து "இராகுவினுடைய தலை என்றபோது, தலையைத் தவிர இராகு, வேறு இல்லாதது போல, உடலைத் தவிர நான் என்ற பொருள் இல்லை" என வாதாடுவர். இது நிற்க. நம் நாட்டவர்கள், இராகு கேதுவைச் சாயாக்கிரகங்கள் என்றே கூறிவந்தனர். 'மருவு பூமியின் சாயையாம் இராகு மண்டலம்,' என்று கூர்மபுராணம் கூறுவது காண்க. வராஹமிசிரர், தமதுசூரிய சித்தாந்தத்தில், "சந்திரன், சூரியனுக்குக்கீழ் ஒரு முகிலைப்போல வந்து மறைக்கச் சூரிய கிரகண முண்டாகிறது; சந்திரன் கிழக்கு முகமாய்ப் பூமியின் நிழலிற்புக, அந்நிழலாற் சந்திர கிரகணம் உண்டாகிறது." என்று கூறுவதிலிருந்து, தற்காலக் கொள்கையை அந்நாளிலேயே அவர், அறிந்திருந்தார் எனத்தெரிகின்றது. இதன் உண்மை யாதெனக் ககோளவிஞ்ஞான சாஸ்திரமுறையில்ஆராய்வோம்.

கிரகணம்:—சாதாரணமாய், அண்டங்கள் எல்லாம், ஒரே பரப்பில் இருப்பதில்லை. சிலவேளைகளில், மூன்று கிரகங்கள் ஒரே பரப்பில் வருவதுண்டு. அவை, அவ்வாறு' நேர்க்கு நேரே நிற்கும்போது, ஒன்று ஒன்றை மறைக்கும். அண்டங்கள், ஒன்றுக்கொன்று பல்லாயிரம் கல் தூரத்தில் இருப்பதால், இம்மறைவினை எல்லாக்கோளங்களிலும் பிரத்தியக்ஷமாகக் காண்பது அருமை. இம்மறைவே, கிரகணமாகும். எல்லா அண்டங்களைக்காட்டிலும், பூமிக்கு அருகாக இருப்பது, சந்திரனேயாம். சந்திரன், நமதுபூமிக்கும் சூரியனுக்கும் இடையே வந்து சூரியனைச் சிறிது காலம் நமது பார்வையினின்றும் மறைக்குமாயின், வான சாஸ்திரிகள், அதனைச்சூரியகிரணம்(SolarEclipse) என்பர்: ஒரு நக்ஷத்திரத்திற்கும், பூமிக்கும் இடையே வருமாயின் நக்ஷத்திர சங்கிரமம் (Occultation) என்பர். சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே பூமி வருமாயின், 'சூரியன் வெளிச்சம், சந்திரன்மீது படவொட்டாமல். அப்பூமி, சிறிது நேரம் மறைக்கும். இதனையே சந்திர கிரணம் (Lunar Ecilpse) என்கிறோம்.

அமாவாசை பௌர்ணமி:—சந்திரன் பூமியைச் சுற்றிவர, முப்பதுநாட்கள் ஆகின்றன. சந்திரன், பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வருகையில், அமாவாசை யென்றும், பூமி சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையே வருகையில் பௌர்ணமி என்றும் இக்காலங்களில், சாதாரணமாய்க் கூறுகின்றோம். இம்மூன்று கோளங்களும், ஒரே பரப்பில் வந்து நிற்பதில்லை. அவ்வாறு, அவை, ஒரே பரப்பில் நிற்குமானால், சூரிய கிரகணம் அமாவாசையிலும், சந்திரகிரகணம் பௌர்ணமியிலும், நிகழ்கின்றன. எனவே, ஒரு மாதத்தில் பதினைந்து நாளில், சூரிய கிரகணமும், சந்திரகிரகணமும் முறையே, அடுத்தடுத்து நேரலாம். அவ்வாறு நேர்ந்தால் உலகத்திற்குத் தீமைவிளையும் என்பது, முற்காலத்தாருடைய நம்பிக்கை.

அருக்கனையும், சோமனையும், எம்மூன்று நாளில்
பொருக்கில் அரவங்கள் தீண்டின் - செருக்களத்து
மன்னர் மடிவார், மடியாரே யாமாயின்,
அன்னம் அரிதாய் விடும்.

—தனிப்பாடல்.

ஈது எத்தனை உண்மையோ ; அறிஞர் ஆராய்க.

ஆகருஷணப் போராட்டம்:—கிரகண காலத்தில்; சூரியன் பூமி சந்திரன் இவற்றின் நிலை, ஒரே பரப்புநிலையாம். சூரிய கிரகணத்தில், பூமி சூரிய இடைநிலை பெறுகின்றது, பூமி. எனவே இம்மூன்று கிரகங்களின் ஆகருஷண சக்திகள் ஒரே நேர்க்கோட்டில் காட்டக்கூடியனவாய் இருக்கின்றன. சாதாரணநாட்களில், அவ்வாறல்ல. மூன்று வேறு பரப்பு நிலைகளில் இருந்து, இவை முக்கோணப் பாரிசமாக மருவிக்கிடக்கும் முக்கோண நிலையைவிட்டு, இம்மூன்று சக்திகளும், நேர்க்கோடு நிலையைப் பெற்றபோது, உலகத்தினுள்ள எல்லாப் பொருள்களிடையேயும், ஒருவகைமாறுதல் நேரிடும் என்பது வெளிப்படை. எத்தகைய மாறுதல்; எவ்வாறு நேரும்; என்று நிர்ணயிக்கப் போதுமான ஆதாரங்கள் இப்போது கிட்டவில்லை. ஆனால், சமுத்திர ஜலம் மாதத்தில் இரண்டுமுறை சுரப்பது, சூரிய பூமி சந்திரர்களின் ஆகருஷணங்களின் போராட்டத்தின் பயனேயாகும். சந்திர கிரகணத்தால் மழை நேரும், என்பர் சிலர்; சூரிய கிரகணம் சில சந்தர்ப்பங்களில் நன்மையையும், சில சந்தர்ப்பங்களில் தீமையையும் பயக்கும் என்பர். ஆயினும் இக்கொள்கைக்கு விஞ்ஞான சாஸ்திர ஆதரவு இல்லை.

கிரகண வகை:—கிரகணங்கள் இருவகை. அவை கட்புலனாகும் கிரகணங்கள்; கட்புலனாகாக் கிரகணங்கள் என்பனவாம். இவற்றைத்தோன்றும் கிரகணம், தோன்றாக்கிரகணம், என்றும் கூறுவர். நமக்கு, இந்தியாவிலே சூரிய கிரகணம் தோன்றுமாயின், அந்தக் காலத்திலே அமெரிக்காவில் இரவாதலால், அங்கே, இந்தக் கிரகணம் தோன்றாது. அவ்வாறே, அமெரிக்காவில் தோன்றும் கிரகணம், நமது கண்களுக்குத் தோன்றாது. ஆகவே, ஒரு கிரகணமே உலகத்தின் சில பகுதிகளில் தோன்றும் கிரகணமாகவும், மற்றப் பகுதிகளில் தோன்றாக் கிரகணமாகவும் இருக்கும். எந்தக் கிரகணமாயினும், இவ்வுலகத்தின் ஒரு பாகத்தில்மட்டும் தோன்றுமேயன்றி, உலக முழுதும் தோன்றுவதில்லை.

தோன்றும் கிரகணம்:—தோன்றும் கிரகணங்களை எடுத்து ஆராய்வோமாயின், அவை, மூவகையாகப் பிரிகின்றன. சூரியன் முழுதும் கண்ணுக்குப் புலனாகாமல் மறையுமானால், அதுதான் பூரண கிரகணம்; ஒரு பாகம் மாத்திரம் மறையுமானால், அதுதான், பாரிச கிரகணம் (Partial Eclipse) சில சமயங்களில், சந்திரமண்டலம் சூரியமண்டலத்தினுள்ளே முற்றும் அடங்கிவிட்டபொழுது, அன்னவாறு சந்திரனால் மறைந்த சூரிய பாகம் இருண்டிருக்க, சந்திரனைச் சுற்றி, அதனால் மறைபடாத சூரியவட்டம், அவ்விருட்டைச் சுற்றி வெளிச்சம் தருமாயின், அதுதான் கங்கண கிரகணம் (Annular Eclipse). இவ்வாறு சூரிய கிரகணம் மூன்று வகையாம். சந்திர கிரகணமும், முழுதும் மறையும் பூரண கிரகணம் என்றும், சிறிதளவே மறையும் பாரிச கிரகணம் என்றும், இரண்டு வகையாகும். கங்கண கிரகணம்,சூரிய கிரகணத்திற்கே சிறப்பாக உரியது. சூரியன், பூமியின் ஓரிடத்தே பூரணமாயும், மற்றோரிடத்தே பாரிச கிரகணமாயும், வேறோரிடத்தில் கங்கண கிரகணமாயும், மற்றும், பின்னுமோரிடத்தே கிரகணமே இல்லாமல் முழுவெயில் வீசிக் காய்ந்தும், தோற்றலாம். சந்திர கிரகணம், பூரணமாய் ஓரிடத்தில் தெரியுமாயின், அக்கிரகணம் தெரிகிற இடங்களில் எல்லாம், பூரணமாகவே தெரியும்; பாரிச கிரகணமானால், பூமியின் ஓரிடத்தே சந்திரன் எவ்வளவு மறைந்து தோன்றுகிறதோ, அந்த அளவுதான், மற்றைய இடங்களிலும் மறைந்து தோன்றும்.

கிரகணம்உண்டாகும்வகை:-முன்னேகூறியவாறு, ஒரே பரப்பில், சூரியன், சந்திரன் பூமி ஆகிய மூன்று கோளங்களும் வந்து நிற்கும்போது, சுடரொளியாகிய சூரியனுக்கு முன்னே நிற்கும் கோளம், பின்னே நிற்கும் கோளத்தை மறைக்கும். இதனால், முன் நிற்கும் கோளத்தின் நிழல், பின் நிற்கும் கோளத்தின் மேல் விழும். பாரிச கிரகணத்தில், வெளிச்சம் குறைவாயும், பூரண கிரகணத்தில் அந்தகாரமாயும், தோன்றும். இதுதான், கிரகணத்தின் தத்துவம். நாம், ஒரு குடையைப் பிடித்துக்கொண்டு வெயிலில் செல்லுவோமாயின், நமது தலைக்கு மேலுள்ள குடையின் குறுக்களவுக்குக் குறையாமல், நிழல் விழுகின்றதன்றோ? அவ்வாறு, நிழல் விழுந்த இடத்தில், சூரிய ஒளி மறைபடுகின்றதன்றோ ? அதுபோலவே, ஆகாயத்தில்,சூரியனுக்கும் நமக்கும் இடையே, சந்திரன் வருமாயின், சந்திர கோளமாகிய பெருங்குடை, சூரியனை மறைத்துவிடும். இப்பெருங்குடை, வெகுதூரத்தில் இருப்பதால், கீழே விழும் நிழலானது, பன்மடங்கு விரிந்து அகன்று,பூமிக்குப்பலகல் தூரம்பரவி, இருளை விளைக்கும். சூரிய கிரகணத்தில், சூரியன் ஒரு பாகம் மறைந்தும், ஒரு பாகம் மறையாதும், நிற்பதுண்டு. நாம், ஒரு குடையை நேராகப் பிடிக்காமல், சாய்வாகப் பிடிப்போமானால், நம்மேல், வெயிலும் நிழலும் படும். இத்தகைய நிலையே, பாரிச சூரிய கிரகணமாம். சூரியனுடைய நடுவிடத்தை மட்டும், சந்திரன் மறைத்து, சூரிய பிரபையையும், வெளிச்சத்தையும் மறைக்காதிருக்குமாயின் சூரியன், ஆழிபோல வட்டமாய் விளங்க, அதற்குள் இருள் வட்டமொன்று, சுற்றிலும் சோதிப்பிரபையோடு தோன்றும்; இதுதான் கங்கணகிரகணம். ஈதும் ஒருவகைப் பாரிச கிரகணமேயாம். சூரிய கிரகணத்தில் தான் இந்தக் காட்சி உண்டேயன்றிச் சந்திரகிரகணத்தில் இல்லை என்று முன்னரே கண்டோம். பூமியானது சந்திரனைக் காட்டிலும் மிகப்பெரியது. ஆதலால், சந்திரவட்டத்தின் நடுவே, பூமியின் நிழல்வட்டம் அடங்குவதற்குஇடம்இல்லை; கங்கண சந்திர கிரகணம் நிகழாது. ஒன்றையொன்று வெட்டும் வட்டங்களில், ஒன்று மற்றொன்றை முழுதும் மறைத்தால் மறைக்கும்; ஒரு பாகத்தை மறைத்தால் மறைக்கும்; அவ்வாறே பூமியின் சாயை, சந்திர வட்டத்தின் ஒரு பாகத்தை மறைத்தால் மறைக்கலாம்; இன்றேல் முழுபாகத்தையும் மறைக்கலாம்.

பூரண கிரகண வர்ணனை:—சந்திரன், பூமியைச் சுற்றி, ஒரு மணி நேரத்தில், 1300 கல் வேகமாகச் செல்லுகின்றான். பூரண சூரிய கிரகணம் 7 நிமிஷத்துக்குள் தோன்றி முடியும் காட்சியாகும். ஈதன்றியும், பூமியில், குறித்த ஓரிடத்தில் 300 வருஷத்திற்கு ஒருமுறைதான் தோன்றும். இப்பூரண சூரிய கிரகணக் காட்சியை ப்ளம்மேரியன் (Flammarion) தன்னுடைய நூலில் (Astronomy for amateurs)பின் வருமாறு வர்ணித்துள்ளார்.

“சூரியனுடைய ஒளிவட்டம், சிறுகச் சிறுகக் கரைந்து கொண்டே போகிறது. மைபோலும் கன்னங்கறுப்பான வட்டமொன்று, மெல்ல மெல்ல, அதன் முன்பாக, நகர்ந்து வருகிறது; சிறிது சிறிதாக, ஒளி வட்ட முழுதினையும் தாக்குகின்றது. ஆகாச மண்டலமும், ஒளிமழுங்கிக் கல்லறைபோலக் கிடைக்கின்றது. இது கண்டு திடுக்கிட்ட இயற்கை யன்னையும், வாய்ப்பூட்டிடப்பட்டவள்போலப் பேச்சற்றுப்பெரு மௌனம் பூண்கின்றாள். பெரியதொரு துயரப்போர்வையை உலகமுழுதும் விரித்துப் போர்த்துக்கொள்கிறது. திடீரென, இரவு வருகிறது. நக்ஷத்திரங்களும், வானத்தே மின்னி மிளிர்கின்றன. தெய்வீக இரகசியத்தின் வழியே தோன்றிய பெரியதொரு வானப் பிரளயத்தில், சூரியன், மறுபடியும் நாம் காணலாகாதபடி அழிந்தொழிந்து மறைந்தது போலத் தோன்றுகிறது.”

இவ்வர்ணனை, மிகவும் உண்மையானதென்று, இக்காட்சியைக் கண்டோர் கூறுகின்றனர். இது காவியமோ, ஓவியமோ, நாம் அறியோம். சயதிரதனை வெளிவருமாறு செய்யக் கிருஷ்ணன், தனது சக்கராயுதத்தால், சூரியனை மறைத்தபோது, உடனே இரவாகிவிட்டதனைப் பூரண சூரியகிரகணத்திற்கு ஒப்பிடலாம்.

பாராழி அவலமறப் பாண்டவர்தம்
இடர்தீரப் பார்த்தன் வாழப்
போராழி யறிதுயிலும் பெருமிதமும்
உடன்மறந்து பிறந்த மாயோன்
ஓராழி யெழுபரித்தே ருடையானை
மாயையினால் ஒழிக்கத் தன்கை
கூராழி பணித்தலும் அக்களம்போல்
சிவந்தனஅக் குடபால் எங்கும்

—**வில்லிபாரதம்.**

கிரகண வட்டம்:—ஒரு வருஷத்தில் தோன்றிய கிரகணம், அந்தப்படியே மறு வருஷத்தில் தோன்றாது. பூமி, சூரியன் சந்திரன் இவைகளின் நிலை மாறிக் கொண்டே வருகிறதன்றோ ? ஒரே படித்தான நிலை, வருவதற்கு, 54 வருஷம் ஒரு மாதம் (31 நாள்) ஆகும். முன்னையதுபோன்ற நிலை, சிறிதொத்துச் சிறிதொவ்வாமல் வருவதற்கு, 18 வருஷம் $10\frac{1}{3}$ நாட்

கள் ஆகின்றனவாம். இவ்வாறு கிரகணம் வரினும் அது, சற்றுமுன் வந்த இடத்தினின்றும், தெற்கேனும், வடக்கேனும், விலகியே தோன்றும். பதினைந்து நாளைக்கு ஒரு முறை, ஒரு கிரகணம் சம்பவிக்கக் கூடுமாயினும், அவ்வாறு, வருஷத்தில் 25 கிரணங்கள் தோன்றுவதில்லை. ககோள சாஸ்திரிகளது ஆராய்ச்சியின் பிரகாரம், ஒவ்வொரு வருஷமும், பூமியிலே, குறைந்தது ஒரு சூரிய கிரகணமாவது, தோன்றுதல் வேண்டும். சாதாரணமாய் இரண்டு கிரகணங்கள் சம்பவிக்கின்றன. சந்திரகிரகணம், ஒரு வருஷத்தில் நிகழாமற்போனாலும் போகலாம். ஆனால், சூரியகிரகணம் நிகழ்ந்தே தீரும். ஒருவருஷத்திலே தோன்றக்கூடியகிரகணங்கள் ஏழு; ஐந்து சூரியகிரகணங்களும் இரண்டு சந்திர கிரகணங்களுமாம்; அல்லது நான்கு சூரிய கிரகணமும் மூன்று சந்திர கிரகணமுமாம். இவைகள், பூரண கிரகணங்களா அல்லவா என்பதுபற்றி, ஒன்றும் பொதுவாகக் கூற இயலுவதில்லை.

மூட நம்பிக்கைகள்:—இக்காலத்தில் மக்கள், ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்குச் சென்று, சூரிய கிரகணத்தைக் காண்பதுபற்றி, நாம் கேட்டும் கண்டும் இருக்கிறோம் அன்றோ? மாந்தர் மனதைக் கவர்கின்ற இக்காட்சியைப் பண்டைக் காலத்தார், வெகு பயபக்தியுடன் கொண்டாடினர். நாகரிகமான பண்டைய ரோமாபுரியில் (Rome), எவனேனும் ஒருவன், பகிரங்கமாக, கிரகணத் தோற்றம் இயற்கைச் சம்பவம், என்று சொல்வானாயின், அவன் உடனே, தண்டிக்கப்படுவான். தேவர்கள் கோபம் கொண்டபோது, அதனை வெளிப்படுத்த வேண்டிச் சூரிய சந்திரர்கள், இருண்டிருக்கும் தமது பின்புறத்தைக் காட்டுகின்றனர், என்று, சால்டேயர்கள் என்ற பண்டைப் பெருமக்கள், இக்கிரகணங்களைப் பற்றி, ஒரு நம்பிக்கை கொண்டிருந்தனர். ஐரோப்பியர்களும், கிரகண காலங்களில், தங்களுடைய நீர்ப்பாங்கான நிலைகளையும், கிணறுகளையும், கிரகணத்தினின்று வரும் விஷப்பொடிகள் தாக்கித் தீட்டுப் படுத்திப் பாழ்செய்யா வண்ணம், மூடி வைப்பார்களாம். கிரகணத்தின்போது, ஏதோ ஒரு பேய், சூரிய சந்திரரை விழுங்க வருகிறதென்று எண்ணி, அதனை ஓட்டுவதற்காகப் பெருவியர்கள் (Peruvians,) தங்கள் நாய்களைக் கட்டிவைத்து அடிப்பார்களாம். இந்நாய்கள் உரத்த கூக்குரலிட்டு அழுமாயின், அச்சத்தைக் கேட்டு, அப்பேய் ஓடிவிடும் என்பது அவர்கள் நம்பிக்கை. இந்த நம்பிக்கையுடன், பண்டைய ரோமர்கள், கிரகண காலத்தில், தங்கள் பாத்திரங்களைத் தட்டிச் சத்தம் செய்வதுமன்றித் தீவட்டிகளை ஆகாயத்தில் உயர்த்திப் பிடிப்பார்களாம். உலகின் வடபாகத்தில் உள்ளவர்கள், சூரியனை, ஏதோ இரண்டு ஓநாய்கள் (Skoll and Hate) விழுங்குகின்றன என்று நம்பி, அச்சமயத்தில் கூக்குரலிடுவார்களாம். நமது தேசத்திலும், இந்துக்கள் ஒவ்வொருவரும், கிரகண காலத்தில், யாதொரு வேலை செய்யாமலும் உண்ணாமலும் இருப்பர். வைதிகர்கள், இக்காலங்களில் நீரிலே மூழ்கி மந்திரம் ஜபிப்பர்.

“எங்கேயோ கிடக்கும் திங்களுக்காக இவ்வாறு புலம்புகிற உலகினர், காதலனைப் பிரிந்த எனக்காக வருந்துதல் இல்லை” என ஒரு தலைவி பாடுவதாகப் பழந்தமிழ்ப் பாட்டொன்று வழங்குகிறது.

அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதின் மாக்களும் நோவர் தோழி
என்றும் நோவார் இல்லைத்
தெண்கடற் சேர்ப்பன் உண்ட என் நலக்கே.

—நச்சினார்க்கினியம் - உதாரணம்.

இவ்வாறு பற்பலவாறு பற்பல கதைகள் பற்பல தேசங்களில் தோன்றியதுமன்றிச் சரித்திரத்தோடு சம்பந்தப்பட்ட கிரகணசம்பவங்களையும் முன்னோர் குறித்து வைத்திருக்கின்றனர். ஆனால் இக்குறிப்புக்கள் வானசாஸ்திர வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை.

கிரகண காலத்தில் ஆராய்ச்சி:—இக்காலத்தில் சூரியகிரகணங்களால், பற்பல அரிய விஷயங்களை விஞ்ஞானசாஸ்திரிகள்கண்டறிகின்றனர். கிரகண காலத்தில், ஆராய்ச்சி செய்வதற்கேற்ற கருவிகளையும் கண்டுபிடித்துள்ளார்கள். சிறிதுகாலத்திற்கு முன்னே, சூரியனைச்சுற்றி யிருக்கும் சுடர்க் கொழுந்துகளைப் பற்றிய ஆராய்ச்சி, கிரகணகாலத்தில்தான் நிகழ்ந்து வந்தது. இக்காலத்தில் இச்சுடர்க்கொழுந்துகளைத் தக்க கருவிகளது துணையால் சாதாரண நாட்களிலும் ஆராச்சி செய்கின்றனர். சூரியனைச் சுற்றிலும் தண்ணொளி பரப்பிப் பால்போன்று ஆகாயம் முற்றும் பரவுகின்ற சூரிய கிரீடத்தையே, தற்போது, கிரகண காலங்களில் ஒளி உடைக்கும் கருவியின் உதவியால் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்துவில் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையில் காணில் சிவன்கண்ணும்—உந்தவே
காட்டாக்கில் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆள்தானும் ஓதஞ் செழுத்து

—சிவஞானபோதம்.

பல போலிகள் இருப்பதால் நம்பிக்கையடைய நேரில் எழுதுக.

ஜிஞ்சிப்
அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி
நஞ்சன்கூடு சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[349-வது பக்கத் தொடர்ச்சி]

ஆள்தலும் ஆடலும் இயல்பின் ஆயவே.

உபகாரம் இருவகைப் படலாம்; ஒன்று முதனுபகாரம், மற்றது பிரதியுபகாரம். பிரதியுபகாரத்தைச் செலுத்த ஒருவன் வருங்கால் மற்றவன் அதனை இருவிதங்களிற் பாவித்து ஏற்றுக்கொள்ள இயலும். "இப் பிரதியுபகாரத்தை வேண்டியே நான் முதலில் உனக்கொரு உபகாரஞ்செய்தேன். அதற்குரிய கைம்மாறு நீ செலுத்தாயேல், என் எண்ணம் சிதைந்து காரியம் கைகூடாமற் கெடுவேன். இப்பொழுது வந்தனை: ஆதலின், எனது எண்ணமுடன் காரியமும் நிறைவேறுமென்ன என்பொருட்டு உவக்கின்றேன்" என்னும் பான்மையில் ஏமாப்புறுவது ஒருவகை. மற்று, "யான் ஒன்றும் கைம்மாறு எதிர்பார்த்திலேன்; எனக்கு வேண்டவும் வேண்டா; துணையொருவருமின்றியே என்னுடைய கருமத்தை என்னால் முடித்துக்கொள்ள இயலும். ஆயினும், இப்பொழுது இவன் செய்ந்நன்றி மறவாமல் வந்தமையால் மேன்மையுற்றுச் சிறக்கின்றானாதலின் அவன் பொருட்டு நான் அவனை உவக்கின்றேன்" என்னும் பரிசு அவனை எதிர்கொள்வது மறுவகை. சுக்கிரீவன் வந்து இராமனைச் சேரும்செவ்வியை வான்மீகமுனிவர் முதலுரைத்த முறையில் நிகழ்த்துகின்றார். அன்னவர் நூலின்படி வாலி தன்பொருட்டே யிரங்கியது போல், இராமன் அங்குத் தன்னைக் கருதியே சுக்கிரீவனது வரவை மகிழ்கின்றான். கம்பரது கற்பனையில் மறுபிறப்பெடுத்த வாலி, தன்னைக் கொன்ற இராமன்பொருட்டு இரங்கும்படி மாறியதையொக்க, இராகவனும் இங்குச் சுக்கிரீவன் தகவு தீர்ந்திலன் என்பதையுன்னியே அவனை இன்புறவரவேற்குமாறு இத்தமிழ்க் கவிஞர் புரிகின்றார். அக் கவிதைக்காட்சியை இனிச் சிறிது காணலாம்.

வந்தனன் சுக்கிரீவன். வந்து,
பிறிவருந் தம்பியும் பிரியப் பேருல
கிறுதியிற் றானென விருந்த வேந்தனை
யறைமணித் தாரினோ டாரம் பார்தொடச்
செறிமலர்ச் சேவடி முடியிற் றீண்டினான்

[பிரிவதற்கரிய தம்பி இலக்குவனும் பிரிந்து சென்றதால், பெரிய உலகமெல்லாம் அழியுங் கற்பாந்த காலத்தில், பிறிதொன்று இன்றித் தான் ஒருவனேயாக இருக்கும் தன்னையேபோன்றிருந்த இராமபிரானை, ஒலிக்கின்ற இரத்தினமாலைகளும் முத்துவடங்களும் பூமியிற்படும்படி, அடர்ந்த செந்தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளைத் தனது தலையினால் தீண்டும்படி விழுந்து வணங்கினான்]

தீண்டலு மார்பிடைத் திருவு நோவுற
நீண்டபொற் றடக்கையா னெடிது புல்லினான்
மூண்டெழு வெகுளிபோ யொளிப்ப முன்புபோ
லீண்டிய கருணைதந் திருக்கை யேவியே

[வணங்கவும், இராமன், தன் மார்பில் தங்கியுள்ள திருமகளும் வருந்தும்படி, நீண்ட அழகிய பெரிய தன் கைகளால் சுக்கிரீவனை நெடுநேரம் கட்டித்தழுவியிருந்தான். முன் மூண்டெழுந்த கோபமானது போய் மறையப் பழையபடி மிக்க அன்புபாராட்டி, அச்சுக்கிரீவனை இருக்கும்படி கட்டளையிட்டு]

அயலினி திருத்திநின் னரசு மாணையு
மியல்பினி னியைந்தவே யினிதின் வைகுமே
புயல்பொரு தடக்கைநீ புரக்கும் பல்லுயிர்
வெயிலில வேகுடை யெனவி னம்பினான்.

[அயலில் இனிது இருக்கச்செய்து, நின் அரசும் ஆணையும் இயற்கையாக அமைந்திருக்கின்றனவா? மேகம்போன்ற வண்மையுடைய பெரிய கைகளால் நீ காக்கும் எல்லா உயிர்களும் உன் குடையின்கீழ்த் தாபம்இன்றி இனிதின் அமைதியோடு வாழ்கின்றனவோ!]

என்று வினவினான். நாடக அரங்கில் ஏறி நடிக்குமொருவன் தனது பாகத்தின் இரஸத்தையும், கதையினுள் தானடங்கும் அமைதியும் உணர்ந்து, அதற்குத் தக்கபடி இயற்கையாக இயம்பவேண்டியவைகளையும் செய்யவேண்டியவைகளையும் நிகழ்த்துவதே நாடகச் சுவையும் நடிப்பின் நற்பயனுமாகுமன்றி, அவன் "நடிப்பது" என்ற நோக்கமுடன் வேறொன்றுஞ் செய்தல் வேண்டா வென்னும் நாடக தருமத்தின் அரிய பெரிய இரகசியத்தை, ஷேக்ஸ்ப்பியர்தம் கலைவளத்தில் வளர்ந்தவொரு ஹாம்லட்டே யல்லால் வேறு யார் நுனித்துரைத்தல் கூடும். அன்னவாறே, அரசும் ஆணையும் இயல்பினின் இயைந்திருப்பதன்றி மன்னனென்பான் இயற்றுதலென்பது யாதுமில்லாத் தத்துவத்தைக் கம்பரது மதிநலப் புலமையில் தோய்ந்தெழுந்த இராமன் தன் வாய்நின்று இங்குஇனிது கேட்கலாகின்றோம். ஆயினும், அரசன் குடை நிழற்றவும் வேண்டா, வெயிலிலதாகின் அது சாலும். இராமன் இயம்பிய இவ்வுரைகள் பொருள் மிகப் பொதிந்தன. *அப்பொருளும் இன்னதே யாதல் வேண்டுமென்பதிலும் ஐயமில்லை. சுக்கிரீவனும் அதனை உணர்ந்துகொண்டான் என்பது விளங்க,

பொருளுடை யவ்வுரை கேட்ட போழ்துவா
னுருளுடைத் தேரினான் புதல்வ னாழிபி
னிருளுடை யுலகினுக் கிரவி யன்னநின்
னருளுடை யேற்கவை யரிய வோவென்றான்.

[அர்த்தம் நிறைந்த அம்மொழிகளைக் கேட்டு, ஆகாயத்திற் செல்கின்ற சக்கரத்தையுடைய தேரையுடைய சூரியனது புத்திரனாகிய சுக்கிரீவன், (இராமனை நோக்கி) ஊழிக்கால இருளையுடைய இவ்வுலகத்திற்குச் சூரியன் போன்ற உனது அருளைப் பெற்ற எனக்கு, நீகுறித்தபடி உயிர்களைப் புரத்தல் அரியதாகுமோ—என்றான்.]

என்னவே அடுத்தபாசுரத்தை அமைத்திருக்கின்றார். தலைவன் கடவுளருளுடையவனாயின் அதுவே அவ்னது காவலில் உள்ளவர் இனிது வாழ்வதற்குப் போ

---

*இக்கருத்தின் அமைதியும் நுட்பமும், இக்கம்பராமாயணக் கட்டுரையிற் பலவிடங்களில் இதன்முன் விளக்கப்பெற்றிருக்கின்றன.

திய தென்பதைச் சுக்கிரீவன் உணர்ந்து கூறல் அதனைச் சாலப் பெருமை செய்கின்றது. உண்மையே நோக்கில், எம்பெருமானது திருவருளைத் தான் பெறுகின்றானென்பது இப்பொழுதுதான் சுக்கிரீவனுக்குத் தெரியவருகின்றது. இதுகாறும் அவனடைந்திருந்ததெல்லாம் செல்வமே, என்பதை யுன்னினான்; உன்னி,

பின்னரும் விளம்புவான் பெருமை யோய்நின
தின்னரு ளுதவிய செல்வ மெய்தினேன்
மன்னவ நின்பணி மறத்து வைகியென்
புன்னிலைக் குரக்கியல் புதுக்கி னேனென்றான்

[பின்னும் விளம்புவானாகி, பெருமை சான்றவனே, நின் இனிய அருளால் கிடைத்த செல்வத்தை அடைந்தேன். அடைந்தும், மன்னவனே, நின் கட்டளையை மறத்துத் தாழ்ந்து, என் அற்பமான குரங்குக் குணத்தைப் புதிதாக வெளிப்படுத்தினேன்—என்றான்]

ஒருவனது அருளை அவன் உதவும் செல்வத்திற் காணல் வேண்டும் என்னுங் கொள்கையனா யிருந்த சுக்கிரீவன், இப்பொழுதுதான் அருளைப்பெறுவதேயன்றி அவ்வருளினின்று வேறொன்று பெறுவதெல்லாம் அவலமாவதற்கே அமைந்த நெறியாம் என்பதைத் தெளிந்தனன். அருளைத் தாங்காமல் அதனை வேறொன்றாய் மாற்றுவதனைத்தும் 'ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றும், புன்னிலை குரக்கியல். இதனையே புதுக்கினான் இவன். இனித் தன் பிழையைப் பேசுவானாகி,

பெருந்திசை யனைத்தையும் பிசைந்து நேடினேன்
தருந்தகை யமைந்துமத் தன்மை செய்திலேன்
திருந்திழை திறத்தினாற் றெளிந்த சிந்தைநீ
வருந்தினை யிருப்பயான் வாழ்வின் வைகினேன்

[பெரியதிக்குக்களெல்லாவற்றையும் நன்குஆராய்ந்து தேடிப்பார்த்துச் சீதாபிராட்டியைக் கொணர்ந்துதருந் திறமை இருந்தும் அப்படிச் செய்யாமல், என்றும் தெளிந்த சிந்தையுடையவனாகிய நீ அவள்பொருட்டுக்கலங்கி யிருக்கவும் நானோ இன்ப வாழ்க்கையிற் காலங் கழித்தேன்.]

இனையன யானுடை யியல்பு மெண்ணமு
நினைவுமென் றாலினி நின்றி யான் செயும்
வினையுநல் லாண்மையும் விளம்ப வேண்டுமோ
வனைகழல் வரிசிலை வள்ளியோ யென்றான்.

[கட்டிய வீரக்கழலையும் கட்டமைந்தவில்லையுமுடைய, வண்மைமிகுந்த இராமபிரானே, என்னுடைய தன்மையும் எண்ணமும் நினைவும் இத்தகையனவானால், இனி நான் நினைத்துச் செய்யப்போகின்ற தொழிலையும் நல்ல ஆண்மையும் சொல்லத் தகுமோ என்றான்.]

இங்ஙனம் மெலிதாகக் கூறித் தன் பிழையைத் தெரிவித்தான் சுக்கிரீவன். இதனைக்கேட்ட இராமன், தன் காரியங் கைகூடிற்றென, வான்மீகத்திற்போல், வீரவாதங்களை செய்தானல்லன்; பிழை பொறுத்தானென்னப் பேசினானுமல்லன். பிழையொன்று தான் அவன்பாற் கண்டிலன் என்னும் பான்மையேபூண்டனன். மற்று,

திருவுறை மார்பனுந் தீர்ந்த தேயும்வந்
தொருவருங் காலமுன் னுரிமை யோருரை
தருவினைத் தாகையிற் றாழ்விற் றாகுமோ
பரதனீ யினையன பகரற் பாலையோ.

[திருமகள் தங்குகின்ற மார்புடையவனாகிய ஸ்ரீ இராமபிரானும், "கழிவதற்கரிய கார்காலம்வந்து நீங்கியும், நமக்குரிய வினைகள் முடியுங்காலம் எதுவென்று முன்னரே நியமித்துவைக்கும் உரிமையுடைய ஊழ் நான்முகன் முதலியவர்களின் சொற்படியே வினை நிறைவேறுமாகையால், நீகாலந்தாழ்த்தாய் என்று சொல்லப்படுமோ" பரதனுக்கு நிகரான நீ இப்படிப் பேசலாமோ.]

என்றனன். என்று, கழிவிரக்கமும் உபசாரணையும் இதனோடு முடிந்ததென்னுங் குறிப்புத்தோன்ற, அனுமனைப்பற்றி இராமன் வினவுவானாயினான். இராமன் "திருவுறைமார்பன்" என்னுஞ் செய்தியை மறக்காமற் சொல்வார் கம்பர். ஆயினும், தோளிலிருக்கும் ஆட்டுக்குட்டியைத் தேடும் அசடன் அல்லன் இராமன். தனக்கு உதவியாமென்று பிறர் சில செய்வதற்கோர் செவ்விதரும் பெருந்தகை.

கலித்தொகை

[351-வது பக்கத் தொடர்ச்சி]

மருதக்கலி 4

பரத்தையர் சேரியிலிருந்து தலைவன் வந்தனன் என அறிந்த காமக்கிழத்தி தன் காதல் மிகுதி கூறி ஊடினாள். அதனை உணர்ந்து அவன் அவளைச் சார்ந்து நின்றான். அவனைக் கண்டு ஊடல் தீர்கின்றவளாய் அவள் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் வதுவைநாட் கலிங்கத்து ளொடுங்கிய
மாதர்கொண் மானோக்கின் மடந்தைதன் றுணையாக
வோர்த்துடை யந்தண னெரிவலஞ் செய்வான்போ
லாய்தூவி யன்னந்தன் னணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉ மிகுபுன லல்லூர

தெள்ளரிச் சிலம்பார்ப்பத் தெருவின்கட் டாக்கிநின்
னுள்ளங்கொண் டொழித்தாளைக் குறைகூறிக்
[கொளநின்றாய்
துணிந்தது பிறிதாகத் துணிவில ளிவளெனப்
பணிந்தாய்போல் வந்தீண்டுப் பயனில மொழிவாயோ

பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள் வரனோக்கி விருந்தேற்றுக் கொளநின்றாய்
நெஞ்சத்த பிறவாக நிறையில ளிவளென
வஞ்சத்தான் வந்தீங்கு வலியலைத் தீவாயோ

இணர்ததை தண்காவி னியன்றநின் குறிவந்தாள்
புணர்வினிற் புகன்றாங்கே புனலாடப் பண்ணியாய்
தருக்கிய பிறவாகத் தன்னில ளிவளெனச்
செருக்கினால் வந்தீங்குச் சொல்லுகுத் தீவாயோ

எனவாங்கு

தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்துமற் றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக் கால்

தரவு

(வரி. 1 - 7) போது அவிழ் - பெரியபூக்கள் மலர்ந்த, பனி பொய்கை - குளிர்ச்சியினையுடைய பொய்கையிலே, புதுவது தளைவிட்ட - புதியதாக முறுக்கு அவிழ்ந்த, தாது சூழ் தாமரை தனிமலர் - மகரந்தப் பொடிகள் சூழ்ந்த தாமரையாகிய தனித்த மலரின், புறம் சேர்பு - புறத்தே சேர்ந்து, காதல்கொள் - அன்புகொண்ட, வதுவை நாள் - கலியாண நாளிலே, கலிங்கத்துள் ஒடுங்கிய - உத்தரீயத்துள்ளே நாணல் மறைந்து நோக்குகின்ற, மாதர்கொள் - அழகுகொண்ட, மான் நோக்கின் மடந்தை - மான்போலும் நோக்கினையுடைய பெண், தன் துணையாக - தனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் துணையாக, ஒத்து உடை அந்தணன் - வேதம் ஓதுதலைக்கொண்ட ஓர் அந்தணன், எரி வலம் செய்வான் போல் - அக்நிக்கடவுளைவலம்செய்வான்போல, ஆய் தூவி அன்னம் - மெல்லிய மயிரினையுடைய அன்னம், தன் அணிநடை பெடையொடு - தனது அழகிய நடையையுடைய பெண் அன்னத்தோடு, மேதக திரிதரூஉம் - மேன்மைபொருந்தும்படி சுற்றிவரும், மிகுபுனல் நல் ஊர - மிசுக நீரையுடைய நல்ல ஊருக்குத் தலைவனே.

அங்கியம் கடவுளை மந்திர விதியின் சுற்றிவரும் அந்தணனைக் கருத்தின்றித் தாமரையைச் சுற்றிவரும் அன்னச் சேவல், சுற்றிவரும் தொழிலால் மாத்திரம் ஒக்கும். அச்சேவலைப் போலத் தலைவனும் கருத்தின்றித் தலைவியொடு அங்கியங் கடவுளை வலம் வந்திருத்தல் வேண்டுமென்றும், இல்லையேல் அவளைப் பிரிந்து பரத்தையர்பால் அவன் செல்லுதற்கு வழி இல்லை என்றும், அத் தலைவியையே அவன் விட்டுப் பிரிவானாயின் தன்னை விட்டுப்பிரிவது வியப்பு அன்று என்றும் காமக்கிழத்தி கருதுவதாக உள்ளுறை கொள்க.

செய்வான் போல - செய்தலைப் போல எனப் பொருள் கொள்க.

தாழிசை.

(வரி. 8-11) தெள் - தெளிந்த, அரி - உள்ளிடு மணியையுடைய, சிலம்பு ஆர்ப்ப - சிலம்பு ஒலி செய்ய வந்து, தெருவின்கண் தாக்கி - தெருவிலே (தாக்கும் தெய்வம் போல்) தாக்கி, நின் உள்ளம் கொண்டு - நினது மனத்தைக் கொண்டு ஒழிந்தாளை - பின்னர் மறைந்து விட்டவளை, குறைகூறி - தாழ்வுசொல்லி, கொளநின்றாய் - வசப்படுத்திக் கொள்ள எண்ணுகின்ற நீ, துணிந்தது பிறிதாக - உறுதி கொண்ட காரியம் வேறொன்றாக, துணிவு இலள் இவள் என - துணிவு இல்லாதவள் இவள் என்று, பணிந்தாய் போல் - தாழ்ந்தாய் போல, வந்து ஈண்டு பயன் இல மொழிவாயோ - வந்து இங்குப் பயனில்லாத சொற்களைச் சொல்லக் கடவையோ ? அது நின்னை வருத்தாதோ !

தாக்கும் தெய்வத்தை மோகினி என்பர் இந்நாள்.

(வரி. 12-15) பட்டுழி - அவள் மறைந்துள்ள இடத்தை, அறியாது - அறியாமல், பாகனை தேரொடும் விட்டு - பாகனைத் தேரொடு அனுப்பி, அவள் வரல் நோக்கி - அவள் வருகையை எதிர்நோக்கி, விருந்து எற்று கொள நின்றாய் - புதிதாக அவளை எற்றுக்கொள்ள நிற்கின்ற நினது, நெஞ்சத்த பிற ஆக - மனத்தே வேறு எண்ணங்கள் இருக்க, நிறை இலள் இவள் என - உறுதி இல்லாதவள் இவள் என்று, வஞ்சத்தான் வந்து ஈங்கு - வஞ்சனையாக வந்து இங்கு, வலி - வலிமையாலே, அலைத்தீவாயோ - வருத்துவாயோ.

அலைத்தீவாய் - திரிசொல்.

(வரி. 16-19) இணர் ததை - பூங்கொத்துக்கள் நெருங்கிய தண் காவின் - குளிர்ந்த சோலையிலே, இயன்ற நின் குறிவந்தாள் - நீ செய்த குறியிடத்தே வந்தவளை, புணர்வினில் புகன்று - புணர்ச்சியிடத்தே விரும்பி, ஆங்கே - அப்பொழுதே, புனல் ஆட பண்ணியாய் - நின்னொடு கூட நீரிலே விளையாடும்படி செய்த நீ, தருக்கிய பிற ஆக - நின் மனத்தே மிக்குநின்ற எண்ணங்கள் வேறாக இருக்க, தன் இலள் இவள் என - தனக்கென ஒரு உறுதியான கருத்துடையவள் இவள் அல்லள் எனக் கருதி, செருக்கினால் - மயக்கத்தால், வந்து ஈங்கு - வந்து இங்கு, சொல் உகுத்தீவாயோ - (பரத்தையர்க்குப் பயன்படும்) சொற்களை வீணே கொட்டக்கடவையோ?

உகுத்தீவாய் - திரிசொல்.

தனிச்சொல்

எனவாங்கு - அசை

சுரிதகம்.

(வரி 21-24) நின் நல்கல் - நினது அருளால், பெரும - தலைவனே, தருக்கேம் - மனம் செருக்கடையோம், விருப்புற்று - எம்மிடத்தே விருப்பமுற்று, தாழ்ந்தாய்போல் வந்து - தாழ்ந்தாயைப்போல வந்து, தகவு இல செய்யாது - தகுதி இல்லாதவற்றைச் செய்யாமல், சூழ்ந்தவை - நீ எண்ணியவைகளை, செய்து - செய்து முடித்துவிட்டு, வீழ்ந்தார் - (நீ இப்போது விரும்புகின்ற) பரத்தையர் மேல், விருப்பு அற்றக்கால் - விருப்பம் அற்றபொழுது, எம்மையும் உள்ளுவாய் - எம்மையும் நினைப்பாயாக.

தமிழ் இலக்கிய வாரப் பத்திரிகை கலாநிலயத்தின் உதவிக்காக

ஷெரிடன் எழுதிய

பிஸாரோ நாடகம்

(தமிழில்)

1935ஞு நவம்பர்மீ 10-ம் தேதி ஞாயிறு மாலை 6-15 மணிக்கு
ஒற்றைவாடைக் கொட்டகையில் நடத்தப்படும்.

P. S. வேலு நாயர்

K. S. அனந்தநாராயண ஐயர்

T. N. சேஷாசலம் ஐயர், B.A., B.L.

முக்கியமான பாகங்களை ஏற்று நடிப்பார்

கட்டணம்: ரூபா 5, 3, 2, 1 அணா 8.

எல்லா வகுப்புகளிலும் மாதர்களுக்குத் தனியிடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

இன்னும் ஓடுகிறது:—சுமார் 253 ஆண்டுகளாய் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு கைக் கடியாரத்தை இங்கிலாந்தைச் சேர்ந்த ஆமர்ஷாம் என்ற இடத்திலிருக்கும் கிளமென்ட் டேவி என்ற ரொட்டிக் கடைக்காரர் வைத்திருக்கிறார். இந்தச் சிறிய கடிகாரம் முழுத் தங்கத்தாலானது. இவர் இதை 43 ஆண்டுகளாய் உபயோகித்து வருகிறார். 43 ஆண்டுகளில் கடியாரத்திற்கு ரிப்பேர் செய்ய ஒரே தடவை இரண்டே பென்ஸ்தான் செலவழித்திருக்கின்றார். இவர் இந்த அபூர்வ கடியாரத்தைத் தனது புதல்வர்களில் ஒருவனிடம் ஒப்படைத்துப் பரம்பரைப் பாத்தியமாக பின்சந்ததிகள் உபயோகித்து வரவேண்டுமெனத் தனது உயிலில் எழுதிவைக்கப் போகிறாராம். இந்தக்கடிகாரத்தை இவருக்குமுன் இவர் முன்னோர்கள் உபயோகித்து வந்தார்களாம்.

* * *

நாய் வளர்க்கும் ஆடு:—அயர்லாந்தில் ஒரு நாய் 13 குட்டிகள் போட்டது. அதே இடத்திலுள்ள ஒரு ஆடு இரு குட்டிகள் போட்டது. ஆனால் இரு ஆட்டுக்குட்டிகளும் இறந்து விட்டன. 13 குட்டிகள் போட்ட நாய், குட்டிகளுக்குப் பால் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டது. இதை அறிந்த ஆடு அந்த நாய்க் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்த்து வந்தது. நாய்க்குட்டிகளும் ஆட்டின் பாலைக் குடித்து வளர்ந்ததோடு, அதை ஒரு தாய்போல் பார்த்து வந்தன. ஆடு எவ்வளவு அன்பாக நாய்க் குட்டிகளை வளர்த்து வந்ததோ, அதேபோல் பிக்ராக் என்னுமிடத்தில் ஒரு பூனை முயல் குட்டிகளை வளர்த்து வருகிறது. ஒரு முயல் 5 குட்டிகள் போட்டது. தாயைக் காணவில்லை. முயல் குட்டிகள் பாலின்றிக் கஷ்டப்பட்டன. பூனை அந்த முயல் குட்டிகளைத் தூக்கிக் கொண்டுபோய் அவைகளுக்குப் பால் கொடுத்து வளர்த்து வந்தது. இந்த வேடிக்கையைக் காண ஜனங்கள் கூடினார்கள். இது பூனைக்குப் பிடிக்கவில்லை. 5 முயல் குட்டிகளையும் அழைத்துக் கொண்டு எங்கேயோ மறைந்து விட்டது.

பெண் வக்கீல்கள்:—சென்னை ஐக்கோர்ட்டில் இரண்டுபிராமணமாதர்கள் நியாயவாதிகளாகத்தோன்றி வாதித்து வருகிறார்கள்.

* * *

குரங்கு ஏற்றுமதி:—சுமார் ஆயிரம் குரங்குகளைக் கூண்டுகளில் அடைத்துக் கல்கத்தாவிலிருந்து கப்பலில் அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் குரங்குகளை அமெரிக்காவிலுள்ள முக்கிய வைத்தியசாலைகளில் வைத்திய சோதனைக்காக உபயோகிப்பார்களாம்.

* * *

சங்கு உற்பத்தி:—செங்கல்பட்டு தாலுகா பொன்விளைந்த களத்தூரில் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள குளத்தில் சென்றவாரம் பேரிரைச்சலுடன் சங்கு ஒன்று உற்பத்தியாயிற்று. அதைக் கிராமத்தார் எடுத்து கிராம பிரதட்சணம் செய்து ஸ்ரீ முன் குடுமீஸ்வரர் ஆலயத்தில் சேர்க்க உத்தேசித்தார்கள். இதற்குள் மேற்படியூர் கிராம முனிசீப் அதைத் தருவித்து செங்கல்பட்டு தாசில்தாருக்கு அனுப்பி ரிப்போர்ட் செய்வதாக வாங்கிப்போயிருக்கிறார்.

* * *

அற்புதப் பூ:—பூக்கள் மரத்திலோ, அல்லது செடிகளிலோ பூப்பதுண்டு. இலை தழை இல்லாமல் பூக்கும் பூக்களும் உலகில் இருக்கின்றன வென்பது உங்களுக்குத் தெரியுமா? இந்தப் பூவுக்கு செடி கொடி கிடையாது. இலை, காம்புகூடக் கிடையாது. இந்தப் பூ மட்டும் பூப்பதுண்டு. இவ்விதப் பூக்கள் சுமத்ராத்தீவைத்தவிர உலகில் வேறு எங்கும் கிடையா. இந்தப் பூக்களும் சிறிய பூக்களல்ல. அவை சுமார் 3 அடி நீளமும், 3 அடி அகலமுமிருக்கின்றன. ஒரு பூ சுமார் 15 ராத்தல் நிறையிருக்கிறது. இந்த அற்புதப் பூவைப் பல ஐரோப்பியர் தேடியெடுத்து ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகிறார்கள்.

* * *

காட்சிப் பிரியர்:-மனிதர்களில் ஒவ்வொரு வருக்கு ஒவ்வொரு விஷயத்தில் பிரேமை இருந்து வருகிறது. மார்க்காம் என்ற ஆங்கிலேயர் பலவிதமான காட்சி சாலைகளைப் பார்ப்பதில் மிகுந்த ஆர்வங் கொண்டவரா யிருக்கின்றார். இவர் ஆங்கிலேயசாம்ராஜ்யத்திலுள்ள எல்லாக் காட்சி சாலைகளையும் பார்த்து வருகின்கின்றார். இதுவரை 2000 காட்சி சாலைகளைப் பார்வையிட்டிருக்கிறார். தான் பார்த்த காட்சி சாலைகளில் சில வினோதமான காட்சிகளைப் பற்றி ஜனங்களுக்குச் சொல்ல வருகிறார். எல்லா காட்சி சாலைகளையும் விட இங்கிலாந்தில்தான் வினோதமான காட்சிசாலைகள் இருக்கின்றன வென்று இவர் இவர் கூறுகிறார். லண்டனிலுள்ள விஞ்ஞான காட்சி சாலைக்குத்தான் ஏராளமான ஜனங்கள் செல்லுகிறார்களாம்.

Indo-Commercial Bank, Ltd.,
Mayavaram.
Capital, Reserves, etc., as at 30th August 1935 : Rs. 10,62,245.
BRANCHES:—
Madras Office:—
107, Armenian Street.
Bazaar Branch:—
260, China Bazaar Road.
Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.
SUB OFFICES:—
Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.
All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.
S. N. N. SANKARALINGA IYER.
Managing Director,
107, Armenian Street, Madras.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனாம்! "காம சாஸ்திரம்" இனாம்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)